கம்பன் கண்ட

பிரகலாதன்



கம்பன் கண்ட பிரகலாதன்

லிப்கோ வெளியீடு

பதிப்பகத்தார் :
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
சென்னை-17.

[விலை 4 அணா

முன்னுரை

திருமாலினிடத்தே பேரன்பு கொண்டு, பக்தியில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர். பிரகலாதனை வைணவர்கள் 'பிரகலாத ஆழ்வான்' என்றே குறிப்பிடுகின்றனர். பிரகலாதனது வரலாறு வடமொழியில் உள்ளது. மங்காப் புகழ் படைத்த மாபெருங் காப்பியத்தை அருளிய கம்பர், தமது இராமாயணத்தில் பிரகலாதனது வரலாற்றை '**இரணியன் வதைப் படலம்**' என்னும் பகுதியின் கண் பாடியமைத்துள்ளார். அப்பகுதி எளிமையும் ஏற்றமும், ஆழமும் அகலமும் கொண்ட பாடல்களைத் தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது.

பிரகலாதனது கதையைத் தமிழ்நாடு நன்கு உணரும். எனினும், கம்பர் எவ்வாறு அவனது கதையை அமைத்துள்ளார் என்பதனை இச்சிறு நூல் தெளிவாக வெளிப்படுத்தும். மக்களுக்குக் கடவுட் கொள்கையை ஊட்டி, அவர்கள் கடவுளின் அருளைப் பெறுமாறு செய்யவேண்டும் என்னும் நோக்குடன் வெளிவரும் இச்சிறு நூலைத் தமிழுலகம் போற்றி வரவேற்கும் என்னும் துணிவு எங்கட்கு உண்டு

—**பதிப்பகத்தார்.**

65/4

இரணியன் வதைப்படலம்

திருமால் இராமனாக அவதாரம் செய்து, இராவணன் என்னும் அரக்கனைக் கொன்ற செய்தியைக் கம்பர் காப்பியச் சுவை பொருந்துமாறு பாடியுள்ளார். அவ்வாறு பாடப்பெற்ற நூல், அவரது பெயருடன் இணைக்கப்பெற்று, **கம்ப ராமாயணம்** என்று வழங்கப்பெறுகிறது. அந்நூலில் கம்பர் ஆறு பெரும்பிரிவுகளை அமைத்துள்ளார். அவை பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன. இராமன், இலக்குவனும், வானரப் படையினரும் சூழச் சென்று, இராவணன் முதலிய அரக்கர்களைக் கொன்று, சீதையை மீட்டு வந்து, அயோத்தியில் முடி சூட்டிக்கொள்ளும் நிகழ்ச்சியை **யுத்த காண்டம்** விரிவாகத் தன்னகத்தே கொண்டுள்ளது.

யுத்த காண்டத்தின் மூன்றாவது படலமாக அமைந்துள்ளது **இரணியன் வதைப்படலம்.** இப்படலத்தின்கண் **176** பாடல்கள் உள்ளன. இராவணனுடைய தம்பியருள் ஒருவனாகிய வீடணன் என்பவனது கூற்றாக அப்பாடல்கள் யாவும் அமைக்கப்பெற்றுள்ளன. இராவணனுக்கு அறிவுரை கூறுங்கால், வீடணன் இரணியனது வரலாற்றை உரைக்கின்றான் என்று கம்பர் பொருத்தமாகக் கற்பனை செய்து, இப்பகுதியை இயற்றியுள்ளார். வான்மீகி ராமாயணத்தில் இத்தகையதொரு பகுதி இல்லை.

எனினும், இடத்திற்கு ஏற்றவாறு, இரணியனது கதையை வீடணன் கூற்றாகக் கம்பர் அமைத்திருக்கும் பான்மை பெரிதும் போற்றுதற்குரியது.

பிரகலாதன் தன் தந்தைக்கு அறிவுரை கூறும் கூற்றாகவும், தனக்கு அவன் துன்பம் செய்த காலையில் திருமாலைத் துதிக்கும் கூற்றாகவும், தன் ஆசிரியருக்கு எட்டெழுத்து மந்திரத்தின் பெருமையைக் கூறும் கூற்றாகவும் கம்பர் இப்படலத்தின் கண் அமைத்துள்ள பாடல்கள் மக்களின் மன இருளைப் போக்கி, பக்தியை ஊட்டும் என்பது உறுதி.

கம்பரைப் பற்றிய செய்திக் குறிப்புகள்

ஊர் : தஞ்சை மாவட்டத்தில் தேரழுந்தூர்.

மரபு : உவச்சர் என்பர் சிலர்; வேளாளர் என்பர் பலர்.

ஆதரித்தவர் : சடையப்ப வள்ளல்.

சமயம் : வைணவர்; ஆயின் பொது நோக்கு உடையவர்.

காலம் : 9-ஆம் நூற்றாண்டு என்பர் சிலர்; 12-ஆம் நூற்றாண்டு என்பர் பலர்.

நூல் இயற்றக் காரணம் : தமது ஆசைபற்றியும், வைணவ சமயத்தை உயர்த்துதற் பொருட்டும் பாடினர் என்பர் பலர். சடையப்ப வள்ளலும், குலோத்துங்க சோழ மன்னனும் தூண்டிய காரணத்தால் பாடினர் என்பர் சிலர்.

நூல் அரங்கேற்றிய இடம் : திருவரங்கம்.

இயற்றிய வேறு நூல்கள் : சடகோபர் அந்தாதி, ஏர் எழுபது, திருக்கை வழக்கம் முதலியன.

கதைச் சுருக்கம்

இரணியன் என்பவன் பெருவலி படைத்த ஓர் அசுரன். அவனுடைய தம்பியாகிய இரணியாட்சன் உலகைச் சுருட்டி மறைத்தானுதலால், அவ்விளைய வனைத் திருமால் வராகாவதாரம் எடுத்துக்கொன்ருர். இந்நிகழ்ச்சியால் இரணியன் திருமாலின்மீது பெருஞ் சினம் கொண்டான்; அவரைத் தன் குலப் பகைவ ராகக் கருதினுன்.

இரணியனுடைய மகன் பிரகலாதன். அவன் பேரறிஞன்; கருவிலே திருவுடையவன். அவனது திருமால் பக்தியை மாற்றுதற்கு இரணியன் பல வகைகளில் முயன்ருன்; அவனைக் கொல்லவும் வழி தேடினுன். ஆயின் 'ஓம் நமோ நாராயணுய' என் னும் எட்டெழுத்து மந்திரத்தைப் பிரகலாதன் இடை விடாமல் ஓதி வந்தானுதலின், அவனை இரணியனுல் கொல்ல முடியவில்லை.

முடிவில் திருமால் நரசிம்மாவதாரம் எடுத்து இரணியனைக் கொன்ருர்; தம் உண்மையன்பனுன பிரகலாதனை மூவுலகங்கட்கும் அரசனுக்கி அவனுக்கு முடிசூட்டி அருளினுர்.

கதையில் வருவோர்

திருமால்: முழுமுதற் கடவுள்; மும்மூர்த்திகளுள் ஒருவர்.

நரசிங்கமூர்த்தி: திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்று; மனித உறுப்புகளும், சிங்க உறுப்புகளும் கலந்த ஓர் உருவம்; இரணியனைக் கொன்ற உருவம்.

இரணியன்: ஒரு பெரு அசுரன்; வரங்கள் பலவற்றைப் பெற்றவன்; நரசிங்கப் பெருமானால் கொலை செய்யப்பட்டவன்.

பிரகலாதன்: இரணியனின் மைந்தன்; திருமாலினிடத்தே பெரும் பக்தி கொண்டவன்.

பிரமதேவர்: மும்மூர்த்திகளுள் ஒருவர்.

இந்திரன்: தேவர்களின் தலைவன்.

இராவணன்: வலிய ஓர் அரக்கன்; திருமால் இராமனாக அவதாரம் செய்து, இவனைக் கொன்றார்.

வீடணன்: இராவணனின் தம்பி.

குறிப்பு: இரணியன் திருமாலால் கொல்லப்பட்ட வரலாற்றை வீடணன் தன் தமையனாகிய இராவணனுக்குக் கூறும் கூற்றாகக் கம்பர் பாடியுள்ளார்.

கதைச் சுருக்கம்

இரணியன் என்பவன் பெருவலி படைத்த ஓர் அசுரன். அவனுடைய தம்பியாகிய இரணியாட்சன் உலகைச் சுருட்டி மறைத்தானுதலால், அவ்விளைய வனைத் திருமால் வராகாவதாரம் எடுத்துக்கொன்ருர். இந்நிகழ்ச்சியால் இரணியன் திருமாலின்மீது பெருஞ் சினம் கொண்டான்; அவரைத் தன் குலப் பகைவ ராகக் கருதினுன்.

இரணியனுடைய மகன் பிரகலாதன். அவன் பேரறிஞன்; கருவிலே திருவுடையவன். அவனது திருமால் பக்தியை மாற்றுதற்கு இரணியன் பல வகைகளில் முயன்ருன்; அவனைக் கொல்லவும் வழி தேடினுன். ஆயின் 'ஓம் நமோ நாராயணுய' என்னும் எட்டெழுத்து மந்திரத்தைப் பிரகலாதன் இடைவிடாமல் ஓதி வந்தானுதலின், அவனை இரணியனல் கொல்ல முடியவில்லை.

முடிவில் திருமால் நரசிம்மாவதாரம் எடுத்து இரணியனைக் கொன்ருர்; தம் உண்மையன்பனுன பிரகலாதனை மூவுலகங்கட்கும் அரசனுக்கி அவனுக்கு முடிசூட்டி அருளினர்.

கதையில் வருவோர்

திருமால் : முழுமுதற் கடவுள்; மும்மூர்த்திகளுள் ஒருவர்.

நரசிங்கமூர்த்தி ; திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்று; மனித உறுப்புகளும், சிங்க உறுப்புகளும் கலந்த ஓர் உருவம்; இரணியனைக் கொன்ற உருவம்.

இரணியன் : ஒரு பெரு அசுரன்; வரங்கள் பலவற்றைப் பெற்றவன்; நரசிங்கப் பெருமானால் கொலை செய்யப்பட்டவன்.

பிரகலாதன் : இரணியனின் மைந்தன்; திருமாலினிடத்தே பெரும் பக்தி கொண்டவன்.

பிரமதேவர் : மும்மூர்த்திகளுள் ஒருவர்.

இந்திரன் : தேவர்களின் தலைவன்.

இராவணன் : வலிய ஓர் அரக்கன்; திருமால் இராமனாக அவதாரம் செய்து, இவனைக் கொன்றார்.

வீடணன் : இராவணனின் தம்பி.

குறிப்பு : இரணியன் திருமாலால் கொல்லப்பட்ட வரலாற்றை வீடணன் தன் தமையனாகிய இராவணனுக்குக் கூறும் கூற்றாகக் கம்பர் பாடியுள்ளார்.

பொருள் அடக்கம்

		பக்கம்
	தோற்றுவாய்	... 9
1.	இரணியன் பிறப்பு	... 16
2.	இரணியனது நிலை	... 20
3.	பிரகலாதனின் பேரறிவு	... 26
4.	'நாராயண' என்னும் நாமம்	... 34
5.	கம்பர் காட்டும் கடவுட் கொள்கை	... 39
6.	பிரகலாதனது மனவுறுதி	.. 46
7.	இரணியன் வதை	... 52
8.	பிரகலாதனுக்குச் சிங்கப்பிரான் முடிசூட்டுதல்	... 67
9.	சிங்கப்பிரானும் திவ்வியப் பிரபந்தமும்	... 74

கம்பன் கண்ட பிரகலாதன்

தோற்றுவாய்

"ஒன்றே என்னின் ஒன்றேயாம்
பலஎன்று உரைக்கின் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம்
ஆம்என்று உரைக்கின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம்
உளதுஎன்று உரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங்கு என்னோ பிழைப்பம்மா."

—கம்ப ராமாயணம்

[என்னின் - என்று கூறினால். அன்று - இத்தகையது அன்று. ஆம் - இன்னபடி ஆகும். நம்பி : அக்கடவுள். பிழைப்பு என்னோ - பிழைப்பது எவ்வாறோ? 'ஒன்றே என்றும், பலவே என்றும், அன்று என்றும், ஆம் என்றும், இன்று என்றும் உளது என்றும் எவ்விதமாகவும் கடவுளைக் கூறுவர். எனவே, இவ்வாறு ஒருவிதமாக இராத பொருளை அறிந்து எவ்வாறு வாழ முடியும்?' என்பது கருத்து.]

இந்நூற்றாண்டில் விஞ்ஞான அறிவு பெரு வளர்ச்சி அடைந்துள்ளது. இக்காரணம் பற்றி, இக்காலத்தைச் சிலர் 'விஞ்ஞான யுகம்' என்று குறிப்பிடுகின்றனர். விஞ்ஞான அறிவின் வளர்ச்சியால் நன்மை விளையுமா அன்றித் தீமை விளையுமா என்பதற்குத் தக்க விடை கூறுதல் இயலாது. மக்களுடைய மனப்பான்மைக்கு ஏற்பவே அவ்வினாவிற்கு

விடை கூறுதல் முடியும். இன்று மேனடுகளில் போர் மேகங்கள் குமுறிக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞான வளர்ச்சியே அத்தகைய குமுறலுக்கு அடிப்படையான காரணம் என்று பலர் கூறுகின்றனர். ஆயின், உலகம் தோன்றிய நாள் முதலாகவே பிணக்குகளும் பூசல்களும் குமுறல்களும் மோதல்களும் தோன்றிவிட்டன என்று கூறுதல் பொருத்தமாகும். நம் நாட்டில் தோன்றியுள்ள புராணங்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

உலகம் தோன்றிய நாள் முதலே அறமும் மறமும், உண்மையும் பொய்யும் தோன்றிவிட்டன போலும்! எளியவரை வலியவரும், வறியவரைச் செல்வரும் வாட்டுகின்ற முறை தோன்றிவிட்டது போலும்! பாவமும் பொய்யும் மிகுந்துவிட்டால் உலகம் எவ்வாறு நிலைக்கும்? தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் வினவிற்கு விடை கூறுவார் போல்,

"பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம்
மண்புக்கு மாய்வது மன்." [அது இன்றேல்

[பண்புடையார்ப் பட்டு உலகம் உண்டு. பண்பு உடையார்ப்பட்டு - பண்புடையவர்களிடத்தே படுதலால். உலகம் - உலகியல். இன்றேல் - அவ்வாறு படுதல் இல்லையாயின். மாய்வது - மாய்ந்து போவதாகும்.]

என்ற குறட்பாவினை அருளியுள்ளார். எனவே,

பண்புடைய நல்லவர்கள் இருத்தலால்தான் உலகம் அழியாமல் உள்ளது. மேலும் மறத்தினுல் அறத்தினை அடியோடு அழிக்க முடியாது. பொய்யினுல் உண்மையை ஒழித்துவிட முடியாது. முடிவில் நோக்கினுல் அறமும் உண்மையுமே வெல்லும் என்பது உறுதியாகும். "அறம் வழுவி மறம் ஓங்கும் காலத்தே யாம் உலகில் அவதாரம் செய்வோம்; அறவோரைக் காப்போம்; தீயோரைத் தொலைப்போம்; அறத்தை நிலை நாட்டுவோம்" என்று கண்ண பிரானுர் அருச்சுனனிடம் கூறிய பான்மை ஈண்டு நோக்குதற்குரியது.

மேலே கூறப்பெற்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டில் புராணங்கள் பல தோன்றியுள்ளன. அவை யாவும் ஒருமுகமாகத் திருமால் பத்து அவதாரங்களை எடுத்தருளிய பான்மையைக் குறிப்பிடுகின்றன. அத்தகைய பத்து அவதாரங்களுள் ஒன்ருகிய இராமாவதாரச் செய்தியை வான்மீகி முனிவர் வடமொழியில் இயற்றினுர்; கம்பர் தமிழில் பாடினுர். வான்மீகி ராமாயணத்தில் காணப்படாத செய்திகள் பல கம்ப ராமாயணத்தில் காணப்படுகின்றன. வடமொழிப் புலமையும், தென்மொழிப் புலமையும் ஒருங்கமைந்த சான்ருேர்கள் இதனை ஒப்புக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக வான்மீகி முனிவர் தம் இராமாயணத்தில், திருமால்

நரசிங்கப் பிரானுகத் தோன்றி, இரணியன் என்னும் அசுரனைக் கொன்ற வரலாற்றினைக் கூறவில்லை. கம்பரோ, வீடணன் இராவணனுக்கு அறவுரை கூறுங்கால், அவ்வரலாற்றினை விளக்கமாகக் கூறினன் என்னுங் கருத்துடன், '**இரணியன் வதைப் படலம்**' என்று தனித்தொரு பகுதியை அமைத்துள்ளார்.

இராவணன் பெரு வீரன்; அரிய தவத்தைச் செய்து, வரங்கள் பல பெற்றவன். அத்தகையவன் அறத்தினை மறந்தான்; மற வழியைப் பின்பற்றினன்; இராமனின் துணைவியான சீதா பிராட்டியாரை வலிதிற் கவர்ந்து வந்து, சிறை வைத்தான். சீதையைச் சிறையிலிருந்து மீட்டற்கு இராமன் வானரப் படையுடன் கடற்கரையை அடைந்துவிட்டான். கடலைத் தாண்டிச் சென்று, இராவணனுடன் போர் புரிந்து வென்று, சீதையை மீட்டு வரவேண்டும் என்பது இராமனது நினைவு. இச் செய்தியை உணர்ந்த இராவணன் தன் சபையைக் கூட்டினன். அவனுடைய தம்பிமாரும் புதல்வர்களும் உறவினரும் ஏனை அரக்கர் தலைவர்களும் சபையில் கூடியிருந்தனர்.

அதுகாலையில் ஒவ்வொருவரும் தம்தம் கருத்தினை இராவணனுக்குக் கூறினர். சிலர் இராவணனை இடித்துரைத்தனர்; பலர் இராவணனது சினத்திற்கு

முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்

அஞ்சி அவனது விருப்பப்படி நடத்தற்கு இசைந்தனர். ஆயின், இராவணனுடைய தம்பிமாருள் ஒருவனாகிய வீடணன் இராவணனை வன்மையுடன் இடித்துரைத்தான்; அவனுக்கு அறவுரைகள் பல கூறினான்; அவனது செயல் தகாது என்றான்; சீதையை விடுதல் நலம் என்றான். இராவணனோ வீடணனைக் கடிந்துரைத்து, இராமனை இகழ்ந்து, தான் பெற்ற வரங்களையும் தன் வலிமையையும் எடுத்துக் கூறி, இராமனுடன் போர் புரிதலே தக்கது என்றான்.

அந்நிலையில் வீடணன் இராவணனை வணங்கி, "ஐய! தேவர்கட்குத் தாங்கள் துன்பம் செய்தீர்கள். அவர்கள் திருமாலினிடம் சென்று முறையிட்டனர். திருமாலும் தேவர்களது துன்பத்தைத் துடைத்தற் பொருட்டு இராமனாக அவதாரம் செய்துள்ளார். இராமன் மானிடன் அல்லன்; திருமாலே இராமன் ஆவான். எனவே, அவனுடன் போர் செய்ய வேண்டாம்" என்றான். இவ்வுரையையும் இராவணன் மதித்தானல்லன். அவ்வளவில் வீடணன் இராவணனுக்கு அறிவு கொளுத்தக் கருதி, இரணியனுடைய வலிமையையும், அவனைத் திருமால் நரசிங்கப்பிரானாகத் தோன்றி அழித்த!பான்மையையும் விளக்கமாகக் கூறினான். இவ்வாறு வீடணன் இராவணனுக்குக் கூறும் செய்தியையே கம்பர் விளக்கமாக 'இரணி

யன் வதைப் படலம்' என்னும் பகுதியின்கண் பாடியுள்ளார். அதற்குத் தோற்றுவாயாகக் கம்பர், இராவணன் மந்திரப் படலத்தின் இறுதியில்,

" பின்னும் வீடணன் ஐயநின்
தாமலாப் பெரியோர்
முன்னை நாள்இவன் முனிந்திடக்
கிளையொடும் முடிந்தார்
இன்னம் உண்டியான் இயம்புவது
இரணியன் என்பான்
தன்னை உள்ளவா கேட்டிஎன்று
உரை செயச் சமைந்தான்."

[தரம்அலா - வலிமையைக் காட்டிலும் மிகுதியான வலிமை படைத்த. இவன்: இந்தத் திருமால். முனிந்திட - சினம் கொள்ள. கிளை - உறவினர். முடிந்தார் - இறந்தார். என்பான் தன்னை-என்பவனைப்பற்றி. உள்ளவா - நிகழ்ந்துள்ளவற்றை. கேட்டி - கேட்பாயாக. சமைந்தான் - தொடங்கினன்.]

என்னும் பாடலை அமைத்துள்ளார்.

இனி, இரணியன் வதைப் படலத்துள் வீடணன் கூற்றாக இரணியனது வரலாற்றைக் கம்பர் அமைத்துள்ள பான்மையையும், இரணியனுடைய புதல்வனை பிரகலாதன் என்பவனது கடவுட்பற்றினைப் பற்றி அவர் கூறியுள்ள செய்தியையும் விளக்கமாக அறிவோம். கம்பர் பிரகலாதனை எத்தகைய பண்

புடையவனுகக் காட்டியுள்ளார் என்பது அவ்விளக்கத்திலிருந்து நன்கு புலனுகும்.

"கம்பர் திருவரங்கத்தில் தமது இராமாயணத்தை அரங்கேற்றுங்கால், 'இரணியன் வதைப் படலம்' என்னும் இப்பகுதியைப் படித்துக் காட்டலானுர். அந்நிலையில் ஆங்கிருந்தோர் இப்பகுதி இராமாயணத்தில் இடம் பெறுவது தக்கதன்று என்று கூறி மறுத்தனர். வான்மீகி ராமாயணத்தில் இச் செய்தி கூறப் பெற்றிராமையே அவர்களது மறுப்புக்குக் காரணம் ஆகும். ஆயின் கம்பர், திருமாலே மனத்தில் நினைத்தவாறே இப் படலத்தைப் படித்து முடித்தார். அவ்வளவில் இறைவனுர் தம்முடைய திருக்கரங்களை நீட்டி, திரு முடியை ஆட்டி, வாய் திறந்து மகிழ்ச்சியுடன் பேரொலி எழுப்பினுர். அதன்பின் யாவரும் இப்பகுதியை ஏற்றுக்கொண்டனர்; கம்பரது இராமாயணத்தின் தெய்வத் தன்மையைப் போற்றினர்" என்று ஒரு வரலாறு கூறப்படுகின்றது; இப்படலத்தில் கம்பர் பிரகலாதனது கூற்றுக அமைத்துள்ள பாடல்கள், மேலே குறிப்பிட்ட வரலாறு உண்மையாகவே இருத்தல் கூடும் என்று நினைக்கத் தூண்டுகின்றது.

---

1. இரணியன் பிறப்பு

பிரமதேவரது மைந்தர் மரீசி பிரசாபதி என்பவர். மரீசி பிரசாபதியின் மைந்தர் காசிப முனிவர். காசிப முனிவருடைய மனைவிமாருள் திதி என்னும் அசுரகுலமடந்தை உருவும் திருவும் வாய்ந்தவள். அவ்விருவருக்கும் பிறந்த புதல்வர்கள் இருவர். அவர்கள் **இரணியகசிபு, இரணியாட்சன்** என்போர். இரணியகசிபு மூத்தவன்; இரணியாட்சன் இளையவன். அவ்விருவரும் வலிய அசுரர்கள்.

இவ்வாறு அவ்வசுரர்கள் இருவரும் பிறந்தமைக்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. அது வருமாறு :

"ஒரு முறை சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் என்னும் முனிவர்கள் நால்வரும் திருமாலைக் காணும்பொருட்டு வைகுந்தத்திற்குச் சென்றிருந்தனர். அதுபொழுது திருமால் திருமகளுடன் தனித்திருந்தார். எனவே, திருமால் தங்கியிருந்த இடத்தைக் காவல் புரிந்துவந்த **ஜயன், விஜயன்** என்னும் இருவரும், திருமாலைக் காணவந்த முனிவர்கள் நால்வரையும் வெளியிலேயே தடுத்து நிறுத்தினர். அவர்களது தடையைப் பொருட்படுத்தாமல் முனிவர்கள் நால்வரும் உட்செல்லலாயினர். அவ்வளவில் வாயிற்காவலர் இருவரும் முனிவர்களை இகழ்ந்தனர். அதனால் சினங்கொண்ட முனிவர்கள் நால்வரும், அவ்விருவரையும் நோக்கி, 'எங்களுடைய

பெருமையை உணராமல் நீங்கள் எங்களைத் தடுத்தீர்கள்; இகழ்ந்தீர்கள். எனவே, நீங்கள் இருவரும் பேராசை, சினம், ஆசை முதலியவற்றை மிகுதியாகக் கொண்ட அசுரர்கள் ஆகக் கடவீராக' என்று சாபம் கொடுத்தனர்.

"அவ்வளவில் திருமால் வெளியே வந்தார்; முனிவர்களைக் கண்டார்; அவர்களுடைய பெருமைக்குத் தக்கவாறு வரவேற்றார். அப்பொழுதுதான் வாயிற் காவலர் இருவரும் தாம் செய்த பிழையை உணர்ந்தனர். எனவே, அவர்கள் முனிவர்கள் நால்வரையும் வணங்கி, தாங்கள் செய்த பிழையைப் பொறுத்து, தங்களுக்குக் கொடுத்த சாபத்தை அகற்றுமாறு வேண்டினர். முனிவர்களோ தாங்கள் கொடுத்த சாபத்தை அகற்றுதல் இயலாது என்று கூறிவிட்டனர். அதனால் பெருவருத்தமுற்ற வாயிற் காவலர் இருவரும் திருமாலை வணங்கித் தங்களைக் காத்தருளுமாறு வேண்டினர். திருமால் அவ்விருவரையும் நோக்கி, 'உங்களுடைய சாபத்தை மாற்ற நான் விரும்பவில்லை. நீங்கள் அசுரர்களாகப் பிறத்தல் உங்களுக்கும் உலகிற்கும் ஒரு விதத்தில் நன்மையையே தரும். அசுரர்களாகப் பிறந்து, எனக்குப் பகைவர்களாக இருந்தால்தான் என்னுடைய உண்மைத் தன்மையை நீங்கள் உணர்வீர்கள்' என்றார். இவ்வாறு முனிவர்கள் நால்வருடைய சாபத்தி

ணுலேயே, திருமாலினுடைய திருவாயில் காவலர்க ளாகிய ஜயன், விஜயன் ஆகிய இருவரும் இரணிய கசிபு, இரணியாட்சன் என்னும் அசுரர்களாகப் பிறந் தனர்."

இவ்வாறு பிறந்த அசுரர்கள் இருவரும் வளர்ந்து பெரு வலிமையைப் பெற்றனர். மூத்தவனுகிய இர ணியகசிபு பிரமனை நோக்கித் தவஞ்செய்து, வரங்கள் பலவற்றைப் பெற்ருன். சிவபிரானிடம் அவன் வரங் களைப் பெற்ருன் என்று வடமொழி நூல்கள் கூறு கின்றன. அவ்விருவராலும் தேவர்கட்கும் மக்களுக் கும் தொல்லைகள் உண்டாயின. எனவே, தேவர்கள் திருமாலினிடம் சரண் புகுந்தனர். அசுரர்களுடைய தொல்லைகளிலிருந்து எல்லோரையும் விடுவிப்பதற் காகத் திருமால் உலகில் அவதாரம் செய்ய இசைந் தார். இச்செய்தியை உணர்ந்தான் இளேனுகிய இரணியாட்சன். உடனே அவன் உலகை ஒரு பாயைச் சுருட்டுதல்போல் சுருட்டினுன்; கடலுக்கு அடியில் ஒளித்து வைத்துவிட்டான்.

இரணியாட்சனது செயலை உணர்ந்த திருமால் பன்றியின் உருவமாகிய வராகாவதாரம் எடுத்தார்; தம்முடைய நீண்ட வளைந்த பல்லால் கடலுக்கு அடியே ஒளித்து வைக்கப்பெற்றிருந்த உலகைத் தூக்கி எடுத்தார். அதுகாலையில் இரணியாட்ச னுக்கும், வராகாவதாரம் எடுத்த திருமாலுக்கும்

பெரும் போர் நடந்தது. அப்போர் ஆயிரம் ஆண்டுகள் நடைபெற்றது என்று நூல்கள் கூறுகின்றன. போரில் இரணியாட்சன் கொல்லப்பட்டான். இவ்வாறு திருமால் வராகாவதாரம் எடுத்து, இரணியாட்சனைக் கொன்று உலகைக் காப்பாற்றினர். தமது தம்பியைத் திருமால் கொன்ற செய்தியை உணர்ந்த இரணியகசிபு திருமாலினிடம் பெருஞ்சினங் கொண்டான்; அவரைத் தன் குலத்திற்கே பெரும் பகைவராகக் கருதினன்; அவரைக் கொன்று, பழிக்குப் பழி வாங்க முடிவு செய்தான்.

மேலே காட்டப்பெற்ற வரலாற்றைக் கம்பர் கூறினரல்லர். அவர் இரணியனுடைய வலிமையையும், திருமாலினிடம் பெருஞ்சினங்கொண்டு, அவரையும் அவரிடம் அன்பு காட்டும் பக்தர்களையும் வெறுக்க முற்பட்ட விதத்தையும் சொல்லுதலிலிருந்து இரணியன் வதைப் படலத்தைத் தொடங்கியுள்ளார். அவர் இரணியனது நிலையைக் கூறும் பான்மையை இனி நோக்குவோம்.

2. இரணியனது நிலை

'இரணியன்' என்னும் சொல் 'பொன்னிற மானவன்' என்று பொருள்படும். பொன்னிற முடைய காரணத்தாலும், பொன்னுடைகளை எப் பொழுதும் உடுத்திருந்த காரணத்தாலும் அவன் அப்பெயரைப் பெற்றான். அவன் வேதங்களை ஐயந் திரிபு அறக் கற்றுணர்ந்தான். அவன் பிரமதேவரை நினைந்து கடுந்தவம் புரிந்து, பெறுதற்கரிய பல வரங் களைப் பெற்றான்; சிவபிரானும் திருமாலும் பிரம தேவருங்கூட முடிவு காணமுடியாதனவும், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களிடத்தில் பொருந்தியனவும் ஆகிய வலிமை களை யெல்லாம் பெற்றிருந்தான். அத்தகைய இரணி யன் அண்ட கோளங்களில் உள்ள யாவரும் தன் பெயரையே சொல்லித் துதிக்கும்படி வாழ்ந்து வந்தான்.

ஆ! இரணியனது வலிமைதான் என்னே! திக்கு களைத் தாங்கும் யானைகளுள் இரண்டை அவன் தன் இரு கைகளால் இழுத்து முட்டவிடுவான்; பெரிய கடல்கள் ஏழையும் தன் இரண்டு கால்களின் அளவேயாகத் தாண்டி அப்பால் செல்வான்; பெரும் புறக் கடலில் நீரில் முழுகுவான்; நாகர் உலகில் நாக கன்னியருடன் இருந்து, அமிழ்தத்தை உண்பான்; தேவர் உலகில் பகற் பொழுதைக் கழிப்பான்; இரவில் பிரமதேவரது உலகில் கொலு வீற்றிருப்

பான்; சில சமயங்களில் சந்திரனது தொழிலேயும், சூரியனது தொழிலேயும், பிற தேவர்களின் தொழில்களேயும் தானே செய்வான். இவ்வாறு தான் விரும்பியவாறெல்லாம் நடந்து, விரும்பியவற்றை யெல்லாம் செய்துவந்த இரணியனுடைய பெயரைச் சொல்லி யாவரும் துதித்ததில் வியப்பு என்ன? மூவுலகங்கட்கும் கடவுளாகிய திருமாலின் திருநாமங்களே யாரும் கூறுதல் கூடாது என்று இரணியன் விதித்திருந்தான். அந்த விதிக்கு எதிராக நடக்கும் துணிவு யாருக்கும் உண்டாகவில்லே. இரணியனுக்கு அஞ்சிய தேவர்கள் அவனேயே போற்றி, அவனுக்கே அருச்சனேகள் புரிந்து, 'இரணியாய நம' என்று கூறினர். பிரமதேவரும் சிவபிரானுங்கூட அவ்வாறே சொல்லி வந்தனர் என்ருல், பிறரைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

இவ்வாறு யாவரும் இரணியனுக்கு அஞ்சி ஒழுகிய நிலேயைக் கம்பர்,

"காவல் காட்டுதல் துடைத்தல்என்று
இத்தொழில் கடவ
மூவ ரும்அவை முடிக்கிலர்
பிடிக்கிலர் முறைமை

ஏவர் மற்றவர் யோகியர்
உறுபதம் இழந்தார்
தேவ ரும்அவன் தாள்அலால்
அருச்சனை செய்யார்.''

''மருக்கொள் தாமரை நான்முகன்
ஐம்முகன் முதலோர்
குருக்க ளோடுகற்று ஓதுவது
அவன்பெருங் கொற்றம்
சுருக்கில் நான்மறை தொன்றுதொட்டு
உரைதொறும் தோன்ருது
இருக்கும் தெய்வமும் இரணிய
னே நம என்னும்.''

[காட்டுதல் - படைத்தல். துடைத்தல் - அழித்தல். கடவ - செய்வதற்கு உரிய. மூவர் : பிரமன், திருமால், சிவன். பிடிக்கிலர் - கைக் கொள்ளாது விடுவாராயினர். உறுபதம் - தாம் தம் யோக வலிமையால் பெறும் பதவிகளை. அலால் - அன்றி வேருென்றை. மரு - மணம். தாமரை - தாமரைப் பூவில் தங்கும். நான்முகன்: பிரமன். ஐம்முகன் : சிவன். குருக்களோடு - இரணியனது புரோகிதரிடத்து. கொற்றம் - வெற்றி. சுருக்கில் - சுருங்கக் கூறுமிடத்து. தொன்று தொட்டு - ஆதிகால முதல். தோன்ருது - மறைந்து. நம : வணக்கம் ; நமஸ்காரம்.]

இரணியன் பெற்றிருந்த வரங்கள் எண்ணில. ''அவன் ஆணுலும் பெண்ணுலும் அலியாலும் இறக்க மாட்டான் ; உயிர் உள்ள மிருகங்களாலும்

உயிரில்லாத பொருள்களாலும் இறக்க மாட்டான்; கண்களால் காணப்படுபவை, மனத்தால் கருதப் படுபவை முதலியவற்றாலும் இறவான்; பூமியிலும் இறவான்; வானத்திலும் இறவான்; தேவர்கள், வானத்தில் திரிவோர், திருமால், பிரமன், சிவன் ஆகிய மும்மூர்த்திகள் முதலியோராலும் கொல்லப் படான்; நீரிலும் நெருப்பிலும் காற்றிலும் வேறு உலகங்களிலும் இறவான். தேவர்களும் முனிவர் களும் கொடுக்கும் சாபங்கள் அவனை அணுகா. வீட்டின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அவன் இறவான். தெய்வப் படைக்கலங்களாலும் அவன் கொல்லப்படான். இரவிலும் பகலிலும் அவன் இறவான். இயமனாலும் அவனது உயிரைக் கவர முடியாது. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களாலும், வேத மந்திரங் களாலும் அவனுக்கு இறப்பு உண்டாகாது. அவனைப் பெற்ற தந்தையாலேயே அவனைக் கொல்லுதல் முடியாது. இவ்வாறு நுட்பமாக ஆராய்ந்து பார்த்து, எப்பொருளாலும் தனக்கு இறப்பு நேரிடல் கூடாது என்று அவன் பிரமதேவரிடம் வரம் பெற் றிருந்தான். அவனது நிலை இத்தகையது" என்றெல் லாம் பொருள்படுமாறு கம்பர் பாடல்களைப் பாடி யுள்ளார். அவை வருமாறு :

"பெண்ணில் பேரெழில் ஆணினில்
அலியினில் பிறிதும்
உள்நிற் கும்உயிர் உள்ளத்தில்
இல்லதில் உலவான்
கண்ணில் காண்பன கருதுவ
யாவினும் கழியான்
மண்ணில் சாகிலன் வானிலும்
சாகிலன் வரத்தால்."

"தேவ ராயினர் ஏவரும்
சேணிடைத் திரியும்
யாவ ரேயும்மற்று எண்ணுதற்கு
அரியராய் இயன்ற
கோவை மால்அயன் மானிடன்
யாவரும் கொல்ல
ஆவி தீர்கிலன் ஆற்றலும்
தீர்கிலன் அனையான்."

"நீரில் சாகிலன் நெருப்பினும்
சாகிலன் நிமிர்ந்த
மாருதத்தினும் மண்ணின்மேல்
எவற்றினும் மாளான்
ஒரும் தேவரும் முனிவரும்
பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும் அனையவன்
தனைச்சென்று சாரா."

“ உள்ளும் சாகிலன் புறத்தினும்
உலக்கிலன் உலவாக்
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம்
யாவையும் கொல்லா
நள்ளில் சாகிலன் பகலிடைச்
சாகிலன் நமனார்
கொள்ளச் சாகிலன் ஆர் இனி
அவனுயிர் கொள்வார்.”

“ பூதம் ஐந்தொடும் பொருந்திய
உருவினல் புரளான்
வேதம் நான்கினும் விளம்பிய
பொருள்களால் விளியான்
தாதை வந்துதான் தனிக்கொலை
சூழினும் சரகான்
ஈத வன்நிலை எவ்வுல
கங்கட்கும் இறைவன்.”

[எழில் - வளர்ச்சி. அலி - ஆணும் பெண்ணும் அற்றவர். உள் - உடம்பினுள். உலவான் - இறக்கமாட்டான். காண்பன - காணப்படும் பொருள்கள். கருதுவ - நினைக்கப்படும்பொருள்கள். கழியான்-இறவான். ஏவரும்-எல்லாரும். சேண் இடை - வானத்தே நெடுந்தொலைவில். இயன்ற - பொருந்திய. கோவை - தொடர்ச்சியாகக் கூறப்பெறுகின்ற. மால் - திருமால். அயன் - பிரமன். மானிடன் - மானை இடக்கரத்தே உடைய சிவபிரான். ஆவி - உயிர். தீர்கிலன் - நீங்கான். நிமிர்ந்த - வீசி எழுகின்ற. மாருதம் - காற்று. மாளான் - இறவான். ஒரும் - முக்கால

நிகழ்ச்சிகளை அறியவல்ல. சாரும் - சேர்கின்ற. அனைய வன்தனை - அத்தகைய இரணியனை. சாரா - சேரா. உள் - விட்டின் உட்புறம். உலக்கிலன் - இறப்பு இல்லாதவன். உலவா - அழிவில்லாத. கொள்ளை - மிகுதி. வான் - சிறந்த. நள்ளில் - இரவில். நமனர் - இயமன். ஆர் - யார்? பூதம் ஐந்து : மண், நீர், தீ, காற்று, வானம். புரளான். இறவான். விளியான் - இறவான். தாதை - தந்தை. தனி - தனியாக, மறைவில். சூழினும் - முயன்றாலும். இறைவன் - தலைவன்.]

என்னே இரணியனது நிலை! அவன் பெருந் தவம் செய்தான்; தன் நுண்ணறிவினால் எண்ணிப் பார்த்து, பெறுதற்கரிய பல வரங்களைக் கடவுளி னிடம் பெற்றான். யாராலும், எப்பொருளாலும், எந்நேரத்திலும், எவ்விடத்திலும் தான் இறத்தல் கூடாது என்று கேட்டு வரத்தைப் பெற்றான். இறப்பே தனக்கு வருதல் கூடாது என்று அவன் பெற்றிலன். அவன் அவ்வாறு கேட்கவும் இல்லை. கேட்டிருந்தாலும் அத்தகைய வரம் கிடைத்திராது போலும்! அதனால்தான் அவன் மேற்கண்ட முறை களிலெல்லாம் தனக்கு இறப்பு வருதல் கூடாது என்று வரம் கேட்டுப் பெற்றான் போலும்!

3. பிரகலாதனின் பேரறிவு

இவ்வாறு உயர்திணைப் பொருள்களாலும், அஃறிணைப் பொருள்களாலும் தனக்கு இறப்பு நேரிடு தல் கூடாது என்று அரிய வரம் பெற்ற இரணியன்

தன்னிகரற்றுத் தனியாட்சி நடத்தி வந்தான். தேவர்கள்கூட 'இரணியாய நம' என்றே சொல்லித் துதித்து வந்தனர். 'நாராயணாய நம' என்று யாரும் சொல்லுதல் கூடாது என்று இரணியன் கடுமையான கட்டளையிட்டிருந்தான். திருமாலை அவன் தன் குலப் பகைவராகக் கருதியிருந்தானன்றோ? யாவரும் இரணியனுக்கு அஞ்சித் திருமாலின் பெயரைக்கூடக் கூறாமல் இருந்து வந்தனர்.

இரணியனுக்கு அருமருந்தன்னமைந்தன் ஒருவன் இருந்தான். அவன் கருவிலே திருவுடையவன்; இயற்கையிலேயே பேரறிவு படைத்தவன்; தூய எண்ணங்களை உடையவன்; கடவுளைப்பற்றிய ஞானம் அமையப்பெற்றவன்; அறத்திற்குத் தலைவன்; உயிர்களிடத்தே தாயினும் பேரன்பு கொண்டவன். அத்தகைய சிறுவனாகிய பிரகலாதனின் பண்பைக் கம்பர்,

"ஆய வன்தனக்கு அருமகன்
அறிஞரின் அறிஞன்
தூயர் என்பவர் யாரினும்
மறையினும் தூயான்
நாய கன்தனி ஞானிநல்
அறத்துக்கு நாதன்
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்
உளன்ஒரு தக்கோன்."

[ஆயவன் - அத்தன்மையை உடையவனாகிய இரணியன். அறிஞரின் - அறிஞர்களைக் காட்டிலும். நாயகன் - கடவுளைப் பற்றிய. தனி - ஒப்பற்ற. ஞானி - ஞானத்தை உடையவன். நாதன் - தலைவன். தாயின் - தாயைப் போல, தாயைக் காட்டிலும்.]

என்று பாடியுள்ளார்.

இத்தகைய இயல்பு வாய்ந்தவன் தன் மகன் என்பதை இரணியன் உணரான். அவன் தன் மகனுடைய அறிவை மட்டும் கண்டு மகிழ்ந்தான். உரிய பருவம் வந்தவுடன் அம்மகனுக்குக் கல்விப் பயிற்சி அளிக்க அவன் விரும்பினான். எனவே அவன் ஓர் அந்தணரிடம் அச்சிறுவனை ஒப்படைத்தான்; அவனுக்கு வேதங்களைக் கற்பிக்குமாறு அவ்வந்தணருக்குக் கட்டளையிட்டான். என்னே மடமை! இயற்கையிலேயே பேரறிவும் பெருஞானமும் பெற்ற அவனுக்கு மறையைக் கற்பிக்கவும் வேண்டுமோ? இரணியனது அறியாமை இருந்தவாறு என்னே! பிரகலாதனுக்கு வேதம் கற்பிக்கப் புகுந்தவர் அசுரர்களது ஆசிரியராகிய சுக்கிராசாரியார் என்று வடமொழி வரலாறு கூறுகின்றது. ஆயின், கம்பர் பிரகலாதனுக்கு வேதம் ஓதுவிக்கப் புகுந்தவர் ஓர் அந்தணர் என்று கூறுகின்றார்.

அந்தணர் பிரகலாதனைத் தனியிடத்திற்கு அழைத்துச் சென்றார்; அவனுக்கு வேதங்களைக்

கற்பிக்கத் தொடங்கி, அவனைப் பார்த்து முதற்கண் "சிறுவ! உன் தந்தையின் பெயரை முதலில் சொல்" என்றார். அதுகேட்ட பிரகலாதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன், "நம் தந்தையின் பெயரை எதற்காக முதற்கண் சொல்லுதல் வேண்டும்? முழு முதற் கடவுளாகிய திருமாலின் பெயரையன்றோ முதலில் சொல்லுதல் வேண்டும்? ஆதியந்தம் இல்லாமல், அழியாப் பொருளாக இருக்கின்ற திருமாலின் பெயரை உளம் குளிர ஓதுதலை விடுத்து, சில வாழ்நாட்களும் பல பிணிகளும் சிற்றறிவும் அழியும் பொருளாகிய நம் தந்தையின் பெயரை எதற்காகச் சொல்ல வேண்டும்?" என்று எண்ணினான். எனவே அவன், தன் தந்தையின் பெயரைச் சொல்ல மறுத்தான். அதுகண்ட ஆசிரியர், அவனைப் பார்த்து, "அறிவுடைய செம்மலே! உன் தந்தையின் பெயரைக் கூற நீ ஏன் கூசுகின்றாய்? உன் தந்தையே எல்லா உலகங்கட்கும் தலைவர் என்பதை நீ அறியாயோ? தேவரும் மூவரும் உன் தந்தைக்கு அஞ்சி நடக்கின்றனரே! எனவே, 'இரணியாய நம' என்று சொல்" என்றான்.

அவ்வளவில் பிரகலாதன் ஆசிரியரை நோக்கி, "ஐய! என்னே இது! என் தந்தையானால் என்ன? அழியும் இயல்புடையோர் பெயரை வேதம் ஓதத் தொடங்கும்பொழுது கூறுதல் தக்கதோ? அது நல்

லொழுக்கம் ஆகுமோ? வேதத்தின் உச்சியாகிய உபநிடதங்களில் கூறப்படுகின்ற உண்மைப் பொருளாகிய திருமாலின் திருநாமத்தைக் கூறுதல் அன்றோ தக்கது?'' என்று கூறி, 'ஓம் நமோ நாராயணய' என்ருன். அதுகாலையில் அவனுடைய உள்ளம் உருகியது; புலன்கள் ஒடுங்கின; கைகள் தலையில் குவிந்தன; கண்கள் பக்திக் கண்ணீர் பெருக்கின; அவனுக்கு மயிர்க்கூச்செறிந்தது.

கண்டார் அந்தணர். அவரது உடல் நடுங்கியது. தமக்கு இறுதிக் காலம் வந்துவிட்டது என்று அவர் நினைத்தார். அவரது தூண்டுதலாலேயே பிரகலாதன் அப்பெயரைக் கூறித் துதித்தான் என்று எண்ணிவிட்டால் என் செய்வது? அவரது உயிர் அக்கணத்திலேயே நீங்கிவிடுமன்றே? எனவே அவர் பிரகலாதனை நோக்கி, ''அழிந்து போகின்றவனே! உன் ஆசிரியராகிய என்னைக் கெடுத்து, உன்னையும் கெடுத்துவிடக்கூடிய சொல்லினை நீ சொன்னுயே! பாவி! உனக்கு எத்துணைத் துணிவு! தேவர்களும் அப்பெயரைச் சொல்லுதற்கு அஞ்சுவரே! அத்தகைய பெயரை நீ சொல்லுதல் தக்கதோ? என்னே வியப்பு! என்ன காரியம் செய்தாய்!'' என்ருர்.

ஆசிரியரது உரையைக் கேட்ட பிரகலாதன், ''ஐய! தாங்கள் என்ன என்னவோ பேசுகின்றீர்களே! யான் முறை தவறி ஒன்றும் சொல்ல

வில்லையே! யாவரும், எக்காலத்திலும், எந்நிலையி லும் சொல்லவேண்டிய பெயரைத்தானே யான் கூறினேன்? அப்பெயரைச் சொல்லியதால் நான் பெரும்பேறு பெற்றேன்; அடைதற்கரிய பெரும் பேற்றினை என் தந்தை அடையச் செய்தேன்; தாங் கள் பிறவிப்பயனை அடையுமாறு செய்தேன்; உலகங்களெல்லாம் உய்வதற்குச் சொல்லப்படும் வேதத்தின் மூதற் சொல் பிரணவம் ஆகும். அந்தப் பிரணவம் கூறும் பொருள் திருமாலின் பெயர் அல்லவோ? யான் செய்த பிழை யாது? சொல் லுங்கள்" என்றான்.

அந்நிலையில் ஆசிரியர் யாது செய்வார்? அவர் பிரகலாதனுக்கு நயவுரை கூற விரும்பி, அவனை நோக்கி, "அன்ப! யான் முதியவன்; கல்விகேள்வி களில் வல்லவன்; வேதங்களை ஐயம் திரிபு அறக் கற்றவன். அத்தகைய என்னைக்காட்டிலும் நீ மிகுதி யாக அறிவாயோ? தேவர்கட்கும் மும்மூர்த்திகட்கும் தலைவன் உன் தந்தை. அதனால்தான் அவரது பெயரை நாங்கள் சொல்கின்றோம். நாங்கள்மட்டும் என்ன? தேவர்களும் அப்படித்தானே சொல்கின் றார்கள்? எனவே, உன் தந்தையின் பெயரைச் சொல்வதுதான் தக்கது. அப்பனே! நீ கூறிய பெயரை மீட்டும் கூறி, என்னைக் கெடுத்துவிடாதே" என்றார்.

ஆசிரியருடைய அச்சத்தை உணர்ந்தான் பிரகலாதன்; அவரது அறியாமைக்கு வருந்தி அவரை நோக்கி, "வயதில் மூத்தவரே! தங்களுக்கு முதுமைப் பருவம் வந்து பயன் யாது? முழுமுதற் கடவுளாகிய நாராயணனின் பெயரையோ சொல்லுதல் தவறு? நன்று நன்று. யானோ அக்கடவுளின் பெயரையன்றி மற்றொன்றைச் சொல்ல அறியேன். இனி யான் கற்க வேண்டுவதும் ஒன்றும் இல்லை. திருமாலின் திருப்பெயரையன்றி, வேறொன்றைக் கற்கவும் வேண்டுமோ? எனது அறிவுக்கு எட்டாததொன்றைக் கற்பிக்கும் திறமையும் தங்களுக்கு இல்லை. யான் அறியாததும் ஒன்றும் இல்லை" என்று கூறி, அவருக்கு அறிவுரைகள் பலவற்றை உரைக்கத் தொடங்கினான்.

என்னே பிரகலாதனின் பேரறிவு! ஆசிரியரிடம் கல்வி கற்கச் சென்ற அவன், அவருக்கே அன்றோ அறிவுரை கூறத் தொடங்கிவிட்டான்? இத்தகைய பிரகலாதனின் பேரறிவை வியவாமல் இருக்க முடியுமோ? பின்பு அவன் தன் ஆசிரியரின் அறியாமையையும் அச்சத்தையும் அகற்ற எண்ணி, அவரை நோக்கி, "பெரியீர்! யான் கூறுகின்றவற்றைக் கேளுங்கள். திருமால் எனது மனத்தே புகுந்துள்ளார். எனவே, வேறு விதமாகத் தாங்கள் எவ்வளவு கூறினாலும், அவை எனது நெஞ்சில் புகா. திரு

மாலின் திருநாமத்தைக் காட்டிலும் பெருமை பெற்ற சொல் உலகில் இல்லை. வேதாந்தங்களைக் கற்றுணர்ந்த வேதியர்கள் யாரை முதலில் கூறுகின்றனர்? உபநிடதங்கள் யாரை அறியும்படி சொல்கின்றன? தம் வினைகள் தீருமாறு தேவர்கள் எப்பெயரைச் சொல்கின்றனர்? திருமாலின் திருப்பெயரையே அன்றோ?

“சித்திகளை முயன்று பெறும் பெரியோர் நாத் தழும்பேற ஓதி ஓதிப் பயிலும் சொல் ‘நாராயணாய நம’ என்பதுதான். அச்சொல்லினும் உயர்ந்த சொல் உளதோ? மோட்சத்தை அடைவதற்குப் பலர் பலவிதமான வழிகளைப் பின்பற்றுகின்றனர். காட்டையும் மலையையும் அடைந்தும், தோலாடை உடுத்தும், தலையை மொட்டை அடித்தும், சடையை வளர்த்தும் தவம் செய்தே பலர் மோட்சத்தினை அடைகின்றனர். அத்தகைய சுற்றுவழி எதற்கு? திருமாலின் திருப்பெயரை ஒரு முறையேனும் உள்ளம் கலந்த அன்புடன் சொல்லுதல் போதாதோ! மோட்சத்தினும் சிறந்த பேறு கிடைக்குமே!

“திருமாலினுடைய அடியவர்களே வேதங்களின் உட்பொருளையும், வெளிப்படையான பொருளையும் தெளிவாக உணர்வார்கள். திருமால் என் மனத்தே குடிபுகுந்து விட்டார். எனவே, யான் எல்லாவற்றையும் எளிதில் உணர்ந்துவிட்டேன். பெரியவரே!

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை

யான் பெற்ற பெரும் பேற்றினைத் தாங்களும் அடைதல் கூடாதோ? இதனினும் சிறந்ததும் உயர்ந்ததும் ஆன பொருள் எங்கும் இல்லை" என்று பலவாறு கூறினான்.

ஆசிரியர் என்ன செய்வார்! தமது விருப்பப்படி அச்சிறுவன் நடக்க மறுத்தலை அவர் இரணியனிடம் மெல்லக் கூறினார்; வேதம் ஓதுதற்குமுன் அவன் அசுரர்களின் குலப் பகைவராகிய திருமாலின் பெயரைக் கூறிய பான்மையையும் உரைத்தார். கேட்டான் இரணியன்; பிரகலாதனை அழைத்து வரச் செய்தான். பிரகலாதன் வந்தவுடன் அவனை நோக்கி, "குழந்தாய்! உன் ஆசிரியர் வெறுக்குமாறு நீ ஏன் நடந்தாய்?" என்றான். அதுகேட்ட பிரகலாதன் தன் தந்தையை நோக்கி, "ஐயனே! யான் என்ன சொல்லிவிட்டேன்? யாவரும் முதற்கண் சொல்லவேண்டிய ஒன்றைத்தானே யான் கூறினேன்? நம் பிறவிப்பயனைக் கருவோடு அழிக்கவல்ல ஒன்றைத்தானே கூறினேன்?" என்றான். இவ்வாறு கத் தந்தைக்கும் தனயனுக்கும் உரையாடல் நடக்கலாயிற்று.

4. 'நாராயணா' என்னும் நாமம்

ஆ! 'நாராயணாய நம' என்பது எவ்வளவு இனிமை! எவ்வளவு அருமை! சொன்னால் நாவிற்கு

இனிக்கின்றதே! நினைத்தால் உள்ளம் உருகுகின்றதே. அப்பெயரைக் கூறிய அளவில் தீராத வினைகள் யாவும் தீர்ந்துவிடுமே! திருமங்கையாழ்வார் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, அப்பெயரை ஓதி ஓதி உயர்நெறியைப் பெற்றார். அவர்,

"குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாரா யணஎன்னும் நாமம்."

[விசும்பு - தேவர் உலகம்; மோட்சம். மற்றும் - பிற எல்லாவற்றையும். தாயினும் - தாயைக் காட்டிலும். ஆயின - வேண்டியவற்றை. நாமம் - பெயர்.]

என்று பாடியுள்ளார். திருமாலின் திருப்பெயர்களைக் கூறுதலால் பெறும் இன்பமே பேரின்பம். இறைவனின் திருநாமங்களைக் கூறிப் பெறும் இன்பம் ஒன்றே தமக்குப் போதும் என்றும், தேவர் உலகை ஆளும் இன்பம் கிடைப்பதாயினும் அது தமக்கு வேண்டாம் என்றும் கருதிய தொண்டரடிப்பொடியாழ்வார்,

" பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே."

[மா - பெரிய, பெருமை. மேனி - நிறம், உடல். கமலம் - தாமரை மலர். அச்சுதன் - அழிவில்லாத திருமால். அமரர் - தேவர். ஏறே - ஆண் சிங்கம் போன்றவனே. என்னும் - என்று சொல்கின்ற. பெறினும் -பெறுவதாக இருந்தாலும். வேண்டேன் - விரும்பேன்.]

என்று பாடியுள்ளார். வில்லிபுத்தூராழ்வாரோ தமது பாரதத்தில்,

" மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகிய
வஞ்சகக் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு
போதர உண்ட புயல்வண்ண !
மாதவ ! யாதவ ! வாசவ ! கேசவ !
மாயா ! ஆயா ! மதுசூதா !
ஆதியும் அந்தமும் ஆகிய நின்புகழ்
அல்லாது உரையேன் அடியேனே."

[மாதுலன் - மாமன். ஏதிலன் - அயலான் ; சண்டுப் பகைவன். கஞ்சன்-கம்ஸன். பூதனை-ஓர் அரக்கி. போதர-

வர. புயல் - மேகம். வண்ணு - நிறத்தினை உடையவனே. மூன்ரும் வரியில் உள்ள பெயர்கள் யாவும் திருமாலின் திருநாமங்கள்.]

என்று பாடியுள்ளார். திருமாலின் புகழை அல்லாது வேருென்றைச் சொல்ல மாட்டேன் என்கின்ருர் வில்லிபுத்தூராழ்வார். இவர்கள் யாவரும் ஏன் இவ்வாறு கூறியுள்ளனர்? திருமாலின் திருப்பெயரைக் கூறிக் கூறி, பெரும்பேறு பெற்ற பான்மையாலேயே அவர்கள் அவ்வாறு பாடியிருத்தல் வேண்டும். பிரகலாதனுக்கும், அவன் தந்தையாகிய இரணியனுக்கும் நிகழ்ந்த உரையாடலைப் பாடுங்கால், பிரகலாதனது கூற்ருகக் கம்பரும் 'நாராயணு' என்னும் நாமத்தின் பெருமையைப் பரக்கக் கூறுகின்ருர்.

இரணியன் பிரகலாதனை நோக்கி, "சிறுவ! உன் ஆசிரியர் தகுதியுள்ளதையே உனக்குக் கூறியிருப்பார். அதுகிடக்க, நீ சொல்லிய சொல் யாது? சொல்லுக" என்ருன். அவ்வளவில் பிரகலாதன் தன் தந்தையை நோக்கி, "தந்தையே! யான் கூறிய சொல்லைத் தாங்கள் அறிய மாட்டீர்களோ? அத்திருநாமத்தின் பெருமை தங்களுக்குத் தெரியாதோ? நன்று நன்று. அதை அறியாதவரும் உலகில் உளரோ? எனினும், யான் அத்திருநாமத்தின் பெருமையைக் கூறுகின்றேன், கேளுங்கள்: யான் கூறியது 'ஓம் நமோ நாராயணுய' என்னும் எட்

டெழுத்து மந்திரமாகும். 'பிரணவப் பொருளாகிய நாராயணனுக்கே யான் எல்லா அடிமையையும் செய்யப் பெறுவேனாக' என்பதுதான் அதன் பொருள். உலகத்தில் எக்காலத்திற்கும் உயர்ந்த பெரிய மந்திரம் அதுவே.

"நாம் விரும்புகின்றவற்றையெல்லாம் நாராயணனது திருப்பெயர் நமக்குத் தரும். நமக்கு மோட்சத்தை அளிக்க வல்லதும் அத்திருப் பெயரே. யாகங்களினால் அடையப்பெறும் சுவர்க்கத்தை அளிப்பதும் அப்பெயரேதான். உலகங்களிலெல்லாம் வாழும் உயிர்களின் மனத்தினால் நினைக்கப்படுவது அந்தப் பெரு மந்திரமாகும். இத்தகைய பெருமந்திரம் வேறு இல்லை. மூன்று கண்களை உடைய சிவபெருமானும் தேவர்களும் இந்தத் திருமந்திரத்தை மறவார். ஒரு வேளை மறந்தாராயின், தேவர்களாயினும் அவர்கள் இறந்தவர்களே யாவர். இந்தப் பெரு மந்திரத்தின் பெருமை முழுவதையும் விளக்கிக் கூறுதல் இயலாது. பெருஞானிகளே அதன் பெருமையை உள்ளவாறு உணர்ந்துள்ளனர்.

"பிறவிக் கடலில் ஆழ்ந்து, பழவினையாகிய சுழியில் சிக்கித் தடுமாறும் உயிர்களை மோட்சமாகிய கரையில் ஏற்ற வல்லது அத் திருமந்திரமேயாகும். அதைக்காட்டிலும் சிறந்த மந்திரம் எங்கும் இல்லை. அதனால்தான் யான் அத் திருமந்திரத்தைக் கூறி

இனத்தான் ஆம் இன்னான் எனப்படும் சொல்

னேன். உமது உயிருக்கும், எனது உயிருக்கும், உலகில் உள்ள எல்லா உயிர்கட்கும் உறுதியை அளிக்க வல்லது அத் திருநாமமே ஆதலால் அதை யான் உள்ளங் குளிர ஓதினேன். யான் நன்ருக ஆராய்ந்து பார்த்தே அதனைக் கூறினேன்" என்ருன். "நான் கண்டுகொண்டேன் நாராயணு என்னும் நாமம்" என்று திருமங்கையாழ்வார் பாடியுள்ள வாறே பிரகலாதனும் அத் திருநாமத்தைக் கண்டு கொண்டான். எனவே அவன் தன் தந்தைக்கு அத் திருநாமத்தின் பெருமையை விளக்கிக் கூறிய தில் வியப்பு என்ன?

5. கம்பர் காட்டும் கடவுட் கொள்கை

தேவர்களும் இரணியனுக்கு எதிரில் திருமாலின் பெயரைக் கூற அஞ்சுவர். ஆயின் பிரகலாதனே அத் திருப்பெயரைக் கூறியதோடு அமையாமல், அதன் பெருமையையும் எடுத்துக் கூறினன். பிரகலாதனது உரையைக் கேட்ட இரணியன் சினங்கொண்டான். அவன் பிரகலாதனை நோக்கி, "பேதையே! யாது கூறினய்! எனக்கு எதிரில் சிறிதும் அச்சமின்றி இவ்வாறு பேசினயே! இப்பெயரைச் சொல்லியவர் களுடைய வாயையும், இப்பெயரை நினைத்தவர் களுடைய மனத்தையும் என் ஆணை சுடும். அவ்

வாறு இருக்க, இப்பெயரை உனக்குக் கூறியவர் யார்? தேவர்களும் முனிவர்களும் என் அடிகளையே வணங்குகின்றனர்; என் பெயரையே சொல்லுகின்றனர்; என்னையே நினைக்கின்றனர்; நீ கூறிய பெயரை அவர்கள் கனவிலும் கருதார். இந்நிலையில் உனக்கு யார் அப்பெயரைக் கூறினர்? இப்பொழுதே சொல்.

"அதுகிடக்க, நீ சொல்லும் அவன் என்னோடு போர் புரியப் பல முறை வந்தான்; என்முன் நிற்க மாட்டாமல் ஓடி ஒளிந்து விட்டான். அவனது வாகனமாகிய கருடன் அவனைச் சுமந்துகொண்டு ஒவ்வொரு முறையும் ஓடி ஒளிந்துவிடுகிறது. அவன் எனக்கு அஞ்சிப் பாற்கடலில் உறங்குகின்ருன் என்று யான் கேள்விப்பட்டேன். அத்தகைய ஒருவனது பெயரை உனக்கு உபதேசித்தவர் யார்?

"அவன் எத்தகையவன் என்பதை நீ அறிவாயோ? அவன் நமது குலப்பகைவன். நம் குலத்தில் தோன்றிய பலரை அவன் கொன்றுவிட்டான். தனது பகையாகிய பாம்பின் பெயரை எலி ஒன்று பல முறை கூறுதலால், அதற்கு என்ன பயன் கிடைக்கும்? அவ்வாறே நம் குலப் பகைவனாகிய திருமாலின் பெயரைக் கூறுதலால் உனக்கு எப்பயன் கிடைக்கும்? உன் சிற்றப்பனாகிய இரணியாட்சன் பெரு வீரன். எல்லா உலகங்களையும் தனது வயிற்றிலே

அடக்கி வைக்கும் ஆற்றல் அவனிடம் இருந்தது. அவனை அத் திருமால் பன்றி உருவை எடுத்துக் கொன்றுவிட்டான். அத்தகைய நம் பெரும் பகைவனது பெயரைச் சொல்லவோ யான் உன்னைப் பெற்றேன்?

"இவ்வுலகங்களில் உள்ள உயர்திணைப் பொருள்கள், அஃறிணைப் பொருள்கள் ஆகியவற்றிற்கெல்லாம் தலைவன் யானே. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முப்பெருந் தொழில்களை யானே செய்து வருகின்றேன். தவங்களைச் செய்தே, சிவனும் திருமாலும் பிரமனும் பதவிகளைப் பெற்றனர். ஆயின் யான் அவர்களைக் காட்டிலும் மிகப்பெரிய தவத்தைச் செய்தேன்; இப்பெரும் பதவியைப் பெற்றேன். அதனால் அவர்கள் தம் பதவிகளை இழந்து விட்டனர். அவர்களால் தங்களையே காத்துக் கொள்ள முடியவில்லை. இங்ஙனமிருக்க அவர்களால் பிறரை எவ்வாறு காப்பாற்ற முடியும்? எனக்கு அஞ்சி ஓடி ஒளிந்துகொண்ட திருமால் உன்னை எவ்வாறு காப்பாற்றுவான்? நீ சிறுவன்; அறிவில்லாதவன். உனது பேதைமையால் நீ பலவற்றைப் பிதற்றினாய். நீ செய்த பிழையைப் பொறுத்தேன். இனி அப்பெயரைச் சொல்லாதே; அவனை நினையாதே. உன் ஆசிரியர் யாது கூறுகின்றாரோ அதையே நீ சொல். போ" என்றான்.

இவ்வாறு இரணியன் தற்பெருமை பேசி, அறியாமையாகிய இருளில் மறைந்து கிடத்தலைக் கண்ட பிரகலாதன் வாளா இருப்பானோ? கடவுளின் உண்மைத் தன்மைகளையெல்லாம் தன் தந்தைக்கு விளக்கிக் கூறுதல் தன் தலைக்கடமையாகும் என்று அவன் கருதினான். எனவே, அவன் கடவுளின் உண்மைத் தன்மைகளை இரணியனுக்குக் கூறினான். இத்தகைய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு கம்பர் கடவுளின் இயல்புகளையும், கடவுட் கொள்கையால் விளையும் நன்மைகளையும் விரிவாகப் பாடியுள்ளார். பிரகலாதன் தன் தந்தைக்கு அறிவுரை கூறும் கூற்றாகக் கம்பர் கூறியுள்ளவற்றை ஈண்டுச் சுருக்கமாக அறிவோம் :—

“விதை இல்லாமல் மரம் தோன்றாது. அது போலவே, கடவுள் இல்லாமல் இவ்வுலகம் தோன்றாது. மரம் முளைப்பதற்கு விதை வேண்டும். அவ்வாறே இவ்வுலகம் தோன்றியிருத்தற்கும் ஒரு மூல காரணன் வேண்டும். அத்தகைய மூல காரணனே கடவுள். (விதை இல்லாமலேயே மரங்கள் சில தோன்றுகின்றனவே என்பர் சிலர். விதை இல்லையேனும், மரம் தோன்றுதற்கு ஏதேனும் ஒன்று வேண்டுமன்றோ? அத்தகைய ஒன்றைப் போன்றவனே கடவுள்.) அக்கடவுள் இவ்வுலகங்களை உண்டாக்கினான்; உலகங்களுள் பல வடிவங்களைக்

கொண்டு நின்றான். எள்ளினுள் எண்ணெய் நிறைந் திருப்பதுபோல அவன் உயிர்களுக்குள் நிறைந்திருக் கின்றான்.

"கடவுள் மூவகை உலகமாக உள்ளான்; குணங் கள் மூன்றாக உள்ளான்; எல்லாப் பொருள்களாகவும் உள்ளான். அவனது உண்மை நிலையைத் தேவர் களாலும் முனிவர்களாலும் முற்றமுடிய உணர முடி யாது. நல்வினை நன்மையைத் தரும். தீவினை தீமை யைத் தரும். ஆனால் கடவுளின் கருணையோ நினைத்த பேறுகளையெல்லாம் தரும். அதனால்தான் விதிமுறை தவறாமல் ஓமம் செய்பவர்கள் திருமாலுக்கு ஆகுதி கொடுக்கின்றார்கள். அவ்வாறு கொடுக்கப்பெற்ற ஆகுதி எல்லாப் பொருள்களினிடத்திலும் சேர்ந்து விடும்.

"திருமால் ஞான உருவமானவன். அதனால்தான் அவன் ஞானிகளின் மனத்தில் நிறைந்துள்ளான். 'ஓம்' என்னும் பிரணவ மந்திரப் பொருளாக உள்ளவன் திருமாலே. அவன் விறகில் தீயைப் போல வும், நீரில் தண்மையைப் போலவும், பாலில் நெய் யைப்போலவும் மறைந்துள்ளான். பல்வகைச் சமயத் தோர், தம்முடைய மனத்தில் தோன்றிய மாறுபாடு களால், கடவுளுக்குப் பல உருவங்களையும், பல பெயர்களையும் படைத்துக் கூறுகின்றனர். கடலில் அலைகள் பல தோன்றுகின்றன. ஆயின் அவை

யாவும் கடலினிடத்திலேயே அடங்கிவிடுகின்றன அன்றோ? அவ்வாறே சமயவாதிகள் கூறும் பல் வகைப் பொருள்களும் திருமாலினிடத்திலேயே அடங்கும்.''

எவ்வளவு எளிய முறையில் கடவுளின் இயல்பைக் கம்பர் விளக்கியுள்ளார்! அவர் அவ்வாறு விளக்கியுள்ள பாடல்களுள் நான்கினையேனும் படித்துப் பாருங்கள். அவை வருமாறு :—

'' தன்னுளே உலகங்கள்
எவையும் தந்தவை
தன்னுளே நின்றுதான்
அவற்றுள் தங்குவான்
பின்னிலன் முன்னிலன்
ஒருவன் பேர்கிலன்
தொல்நிலை ஒருவரால்
துணியற் பாலதோ?''

'' மூவகை உலகுமாய்க்
குணங்கள் மூன்றுமாய்
யாவையும் எவருமாய்
எண்ணில் வேறுபட்டு
ஓவல்இல் ஒருநிலை
ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும்
உணரத் தேயுமோ?''

" கண்ணினும் கரந்துளன்
கண்டு காட்டுவார்
உள்நிறைந் திடும்உணர்
வாகி உண்மையால்
மண்ணினும் வானினும்
மற்றவை மூன்றினும்
எண்ணினும் நெடியவன்
ஒருவன் எண்ணிலான்."

" காலையின் நறுமலர்
ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை
சமய வாதியர்
சூலையின் திருக்கு அலால்
சொல்லு வார்க்கெலாம்
வேலையும் திரையும்போல்
வேறு பாடிலான்."

[தந்து - உண்டாக்கி. தங்குவான் - பல வடிவங்களை எடுத்துத் தங்குவான். பேர்கிலன் - நிலைமாறுபடாதவன். தொல்நிலை - பழைய நிலை. துணியற்பாலதோ - துணிந்து சொல்லக் கூடியதோ? மூவகை உலகு: சுவர்க்கம், பூமி, பாதலம். குணங்கள் மூன்று: சத்துவம், இராசதம், தாமதம். ஓவல் - நீங்குதல். தேயுமோ- குறைபெறுமோ? கரந்துளன் - மறைந்துள்ளான். உணர்வு - அறிவு. மற்றை மூன்று: நீர், தீ, காற்று. எண்ணினும் நெடியவன் - எண்ணத்திற்கு எட்டாமல் கடந்துள்ளவன். எண்

இலான் - ஒருவரையறையில் அடங்காதவன். காலையின் - தக்க காலத்தில் மலர்ந்த. ஒன்ற - ஒருசேர. புரை - ஒத்த. வாதியர் - வாதம் செய்வோர். சூலை - குடைதல். திருக்கு - மாறுபாடு. வேலை - கடல். திரை - அலை.]

6. பிரகலாதனது மனவுறுதி

"வலியில் அன்று தந்தை செற்ற
மைந்த னுக்கு வந்தபேர்
நலிவெ லாம்அ கற்றும் நாமம்
நாலி ரண்டெ ழுத்துடன்
பொலியும் நாமம் மறைகள் சொன்ன
பொருள் விளக்கும் நாமம்முன்
கலியன் எங்கள் மங்கை யாதி
கண்டு கொண்ட நாமமே."

[தந்தை: இரணியன். செற்ற - கோபிக்கப்பெற்ற. மைந்தன்: பிரகலாதன். நலிவு - வருத்தம். நாமம் - பெயர். நாலிரண்டு எழுத்து: "ஓம் நமோ நாராயணாய" என்னும் எட்டெழுத்து மந்திரம். கலியன்: திருமங்கையாழ்வார். மங்கை: திருமங்கை நகர். திருமங்கையாழ்வார், "நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று பாடியுள்ள பான்மையை நினைவிற்கொண்டே, "கலியன் எங்கள் மங்கை யாதி கண்டு கொண்ட நாமமே" என்று ஈண்டுப் பாடப் பெற்றுள்ளது.]

என்று வில்லிபுத்தூராழ்வார் தமது பாரத நூல், பத்தாம் போர்ச் சருக்கத்திற்குக் கடவுள் வாழ்த்துப்

பாடலில் அமைத்துள்ளார். இப்பாடலில் அவர், "மைந்தனுக்கு வந்த பேர் நலிவெலாம் அகற்றும் நாமம்" என்று கூறியுள்ளார். "பிரகலாதனுக்கு வந்த பெரிய வருத்தங்களை யெல்லாம் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரம் அகற்றியது" என்பது அத்தொடரின் பொருள் ஆகும். பிரகலாதனுக்கு எத்தகைய வருத்தங்கள் வந்தன? அவற்றைத் திருமாலின் திருநாமம் எவ்வாறு அகற்றியது? அவற்றை ஈண்டு அறிவோம்.

தன் குலப் பகைவராகிய திருமாலின் பெயரைக் கூறி, தனக்கும் அறிவுரை கூறிய பிரகலாதனிடம் இரணியன் கடுஞ்சினம் கொண்டு, அவனைக் கொன்றுவிட முடிவு செய்தான். அவனைக் கொல்லாமல் விடுத்தால், அவனால் பலரது மனம் மாறுபட்டு விடும் என்றும், பலர் திருமாலின் அன்பர்கள் ஆகி விடுவர் என்றும் அவன் நினைத்தான். எனவே அவன் தன் பரிசனங்களை அழைத்து, பிரகலாதனைக் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான். அக்கட்டளையைக் கேட்ட பிரகலாதன் அஞ்சினனோ? அன்று அன்று. திருமாலினிடத்தே திண்ணிய அன்பு பூண்ட அவனது நெஞ்சம் அஞ்சுமோ?

இரணியனது கட்டளைப்படி, அசுரர்கள் சிலர் பிரகலாதனை அழைத்துச் சென்றனர்; அச்சுறுத்தினர்; வெருட்டினர்; தின்று தீர்ப்போம் என்று

உரப்பினர் ; படைக்கலங்கள் பலவற்றை அவன்மீது வீசினர். பனங்காட்டு நரி சலசலப்பிற்கு அஞ்சுமோ? பிரகலாதன் அஞ்சினனல்லன். அவன்மீது வீசப் பெற்ற படைக்கலங்கள் யாவும் மலையின்மீது வீசப் பெற்ற மண் கட்டிகளைப் போல் தகர்ந்து வீழ்ந்தன. அவை சிறிதேனும் பிரகலாதனது உடம்பிற்கு ஊறு செய்தில. ஏன்? அவன் இடைவிடாமல் திருமாலின் திருமந்திரத்தை நினைத்து உச்சரித்து வந்தான் அன்றே?

பிரகலாதனுக்குப் படைக்கலங்களால் தீங்கு நேராமையைக் கண்ட அசுரர்கள் சிலர் அவனைப் பெரு நெருப்பில் தள்ளினர். பிரகலாதன் 'அரி' என்று சொல்லித் தொழுதவாறு நின்றான். என்னே வியப்பு! அந்தப் பெருந் தீ அவனுக்குக் குளிர்ச்சி யாக இருந்தது! பின்பு நச்சுமிக்க நாகங்களை அவர் கள் பிரகலாதனின்மீது ஏவினர். அவை பிரகலாத னைக் கடித்தன. ஆயின் அவனைக் கடித்த பாம்பு களின் பற்கள் உதிர்ந்துவிட்டன. அவ்வாறு உதிர்ந்த இடங்களிலிருந்து அமிழ்தத் துளிகள் ஊறி ஒழுகின. ஏன்! பிரகலாதன் எட்டெழுத்து மந்திரத்தை மறவா தவன் அன்றே? அம்மந்திரத்தின் பெருமையே பெருமை!

பின்பு அசுரர்கள் மலைபோன்ற ஐராவதம் என்னும் யானையை அவன்மீது ஏவினர். அந்த யானை

திக்குயானைகளைக் காட்டிலும் வலியது. அந்த யானையும் இடிபோன்று பிளிறியவாறு பிரகலாதனை நோக்கிப் பாய்ந்தது. அதுகாலையில் பிரகலாதன், "யானைக்கரசே! உனது இனத்தைச் சேர்ந்த கஜேந்திர ஆழ்வான் முன்பு ஆதிமூலமே என்று ஓலமிட்டு அலறியபொழுது யாது நடந்தது தெரியுமா? முதலையால் விழுங்கப்படும் நிலையில் அந்த யானை இருந்தபொழுது, அதன் எதிரே திருமால் தோன்றினர் அன்றே? அவ்வாறு தோன்றி, முதலையைக் கொன்று அந்தக் கஜேந்திரனைக் காத்தார் அல்லவா? அத்தகைய திருமால் என் மனத்தில் உள்ளார். இதனை நீ அறிந்துகொள்" என்றான். இங்ஙனம் பிரகலாதன் கூறிய அளவில், பாய்ந்து வந்த யானை, அவனைத் தொழுது அஞ்சி அப்பால் சென்றது. அச் செய்தியைக் கேட்ட இரணியன் ஐராவதத்தைக் கொன்றுவிடுமாறு பணித்தான். அவ்வாறே அசுரர்கள் அதைக் கொல்ல முற்படவே, அந்த யானை அஞ்சி மீட்டும் பிரகலாதனை நெருங்கி, அவனைத் தன் கொம்புகளால் குத்தியது. ஆ! என்னே வியப்பு! எட்டெழுத்து மந்திரத்தின் பெருமைதான் என்னே! அம் மந்திரத்தையே இடைவிடாது சொல்லிக்கொண்டிருந்த பிரகலாதனின்மீது ஐராவதம் குத்திய அளவில், அதன் கொம்புகள் இரண்டும் ஒடிந்துவிட்டன!

துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு

ஐராவதத்தின் கொம்புகள் ஒடிந்த செய்தியைக் கேள்வியுற்ற இரணியனது சீற்றம் விஞ்சியது. அவன் தன் ஏவலரை நோக்கி, "பிரகலாதனை மலையுடன் இறுகக் கட்டிக் கடலில் தள்ளிவிடுங்கள்" என்றான். ஏவலர்களும் அவ்வாறே செய்தனர். ஆயின் பிரகலாதன் சிறிதும் வருந்தினானல்லன். அவனுடைய மனம் எட்டெழுத்து மந்திரத்தை நினைத்தவாறே இருந்தது; வாயோ அம்மந்திரத்தை உச்சரித்தவாறே இருந்தது. அம்மந்திரத்தின் பெருமையால் கடல் மடுவைப்போலவும், பிரகலாதனைச் சேர்த்துக் கட்டப் பெற்றிருந்த பெருங்கல் சுரைக் குடுவையைப் போலவும் தன்மைகளைக் கொண்டன. மலை கடலில் மிதந்தது! பிரகலாதனோ எத்தகைய துன்பமும் இன்றி இருந்தான்.

அவ்வாறு இருந்த காலையில் பிரகலாதன் ஆயிரம் திருநாமங்களையும் கூறித் திருமாலைப் பலவாறு துதித்தான். அவன் திருமாலைத் துதித்த பான்மையைக் கம்பர் பத்துப் பாடல்களில் அமைத்துள்ளார். அவற்றுள் மூன்று பாடல்கள் வருமாறு :—

" ஆதிப் பரமாம் எனில்அன்று எனலாம்
ஓதப் பெருநூல் கள்உலப் பிலவால்
பேதிப் பனநீ அவைபேர் கிலையால்
வேதப் பொருளே வினையா டுதியோ?"

"நின்னில் பிறிதாய் நிலையில் திரியாத்
தன்னில் பிறிதா யினதாம் எனினும்
உன்னில் பிறிதா யினவோ உலகம்
பொன்னில் பிறிதா கிலபொற் கலனே."

"தாய்தந் தைஎனும் தகைவந் தனைதான்
நீதந் தனைநீ உறுநெஞ் சினன்நான்
நோய்தந் தவனே நுவல்தீர் வும்எனா
வாய்தந் தனசொல் லிவணங் கினனால்."

[ஆதி - முதன்மையான. பரம் - பரம்பொருள். அன்று - அங்ஙனம் அன்று. பெருநூல்கள் - பெரிய சமய நூல்கள். உலப்பில - அளவில்லாமல் உள்ளன. பேதிப்பன - அவை ஒன்றோடொன்று மாறுபடுகின்றன. பேர்கிலை - நீ வேறு படுகின்றாயில்லை. வேதப் பொருளே - வேதத்தில் கூறப் படும் பொருளாக இருப்பவனே. நின்னில் - உன்னிடத்தி லிருந்து. தன்னில் - தமக்குள்ளே. உலகம் உன்னில் பிறிதாயினவோ என மாற்றுக. பொன்னின் - பொன்னி னின்றும். பிறிதாகில - வேறாகின்றன இல்லை. பொற் கலன் - பொன்னாலாகிய அணிகலன்கள். தகை - அன்பின் தகுதியுடன். தந்தனை - என்னைப் படைத்தருளினாய். நோய் தந்தவனே - எனக்குப் பிறவி நோயைத் தந்த நீயே. நுவல் - சொல்லப்படும். தீர்வும் - பரிகாரமும் ஆவாய். எனா - என்று சொல்லித் துதித்து. வாய்வந்தன - வாயில் வந்த சொற்களை.]

மலையுடன் கட்டிக் கடலில் தள்ளப்பெற்ற காலத்தில் துன்பமின்றிப் பிரகலாதன் மிதந்த பான்மையை உணர்ந்தான் இரணியன். அவன் பின்னும் சீற்றம்

கொண்டு, கொடிய நஞ்சினை ஊட்டிப் பிரகலாதனைக் கொல்லுமாறு தன் ஏவலரை விடுத்தான். அவர்களும் அவ்வாறே பிரகலாதனுக்குக் கடு நஞ்சினை ஊட்டினர். நஞ்சினையுண்டும் இறவாது விளங்கிய சிவபிரானைப் போன்று பிரகலாதனும் வருத்தமின்றி விளங்கினான். அதனை உணர்ந்த இரணியன் பிரகலாதனைச் சம்மட்டிகளால் அடிக்கச் செய்தான். அப்பொழுதும் பிரகலாதன் திருமாலை நினைத்தவாறு இருந்தான். சம்மட்டி அடிகள் அவனை ஒன்றும் செய்தில. இவ்வாறு எவ்வகையிலும் பிரகலாதன் இறவாமையை உணர்ந்த இரணியன் பெரிதும் கொதித்து எழுந்தான்; 'பிரகலாதனை யானே கொல்வேன்' என்று கூறி விரைந்தான்; மனவுறுதி சிறிதும் தளராமல், திருமாலின் திருநாமங்களையே சொல்லியவாறும் நினைத்தவாறும் இருந்த பிரகலாதனைச் சேர்ந்தான்.

7. இரணியன் வதை

தன்னிடம் வந்த தந்தையைப் பிரகலாதன் வணங்கினான். பின்பு தன் தந்தையைப் பார்த்து அவன், " தந்தையே! எனது உயிரைக் கவர்தற்குத் தாங்கள் விரும்புகிறீர்கள். அஃது இயலுமோ? என் உயிர் நும் வசமாகுமோ? எல்லா உலகங்களையும்

படைத்தருளிய திருமாலால்தான் என் உயிரைக் கொள்ள முடியும். பிறரால் அதைக் கொள்ள முடியாது" என்றான். அவ்வளவில் இரணியன் உரப்பியவனாய், "அடே! உலகத்தைப் படைத்தவர் யாவர்? என் பெயரைக் கூறித் துதித்துக்கொண்டிருக்கின்ற மும்மூர்த்திகளா? அல்லது முனிவர்களா? இல்லையேல் தேவர்களா? யாவர் என்று கூறுவாய்" என்றான். பிரகலாதனைக் கொண்டு திருமாலை நேரில் காணலாம் என்றும், அவ்வாறு திருமாலைக் கண்டால் அவரைக் கொன்றுவிடலாம் என்றும் இரணியன் நினைத்தானாதலாலேயே அவன் பிரகலாதனைக் கொல்ல முயன்றானல்லன்.

அவ்வுரையைக் கேட்ட பிரகலாதன், தன் தந்தையை நோக்கி, "உலகங்களைப் படைத்தவனும், உயிர்களைப் படைத்தவனும் யாவன் எனில், பூவில் மணமும், எள்ளில் எண்ணெயும்போல் நிறைந்துள்ள திருமாலே யாவான். அவனை யான் எளிதில் காண்கின்றேன். அவன் எங்கும் இருக்கின்றான். நான் கூறுகின்றவை உண்மையானவை என்று நீ கொள்ள மறுக்கின்றாய். எனவே உன்னால் அவனை எளிதில் காண முடியாது. அவனுடைய குணங்கள் மூன்று; செயல்கள் மூன்று; உருவங்கள் மூன்று; கண்கள் மூன்று; உலகங்கள் மூன்று. முதலாகவும் நடுவாகவும் இறுதியாகவும் உள்ளவன் அவனே.

இவ்வாறுதான் வேதங்கள் கூறுகின்றன. இஃது உண்மை'' என்றான். பிரகலாதன் இவ்வாறு கூறிய பான்மையைக் கம்பர்,

'' உலகுதந் தானும் பல்வேறு
உயிர்கள்தந் தானும் உள்ளுற்று
உலேவிலா உயிர்கள் தோறும்
அங்கங்கே உறைகின் றானும்
மலரினின் மணமும் எள்ளில்
எண்ணெயும் போல எங்கும்
அலகில்பல் பொருளும் பற்றி
முற்றிய அரிகாண் எந்தாய்.''

'' என்கணால் நோக்கிக் காண்டற்கு
எங்கணும் உளன்காண் எந்தை
உன்கண் நான் அன்பில் சொன்னால்
உறுதிஎன்று ஒன்றும் கொள்ளாய்
நின்கணால் நோக்கிக் காண்டற்கு
எளியனோ நினக்குப் பின்னோன்
பொன்கணான் ஆவி உண்ட
புண்டரீ கக்கண் அம்மான்.''

'' மூன்றுஅவன் குணங்கள் செய்கை
மூன்றுஅவன் உருவம் மூன்று
மூன்றுகண் சுடர்கொள் சோதி
மூன்றுதன் உலகம் மூன்று

தோன்றலும் இடையும் ஈறும்
 தொடங்கிய பொருள்கட் கெல்லாம்
சான்றுஅவன் இதுவே வேத
 முடிவிது சரதம் என்றான்.''

[தந்தான் - படைத்தவன். உள்ளூற்று - உள்ளே பொருந்தி. உலேவிலா - எல்லேயில்லாத. மலரினின் - மலரினிடத்தே. அலகில் - அளவில்லாத. முற்றிய - நிறைந்திருக்கின்ற. அரி - திருமால். எந்தாய் - தந்தையே! எந்தை - என் தலேவனுகிய திருமால். கொள்ளாய் - கொள்ளுகின்றாய் அல்லே. பின்னேன் - தம்பி. பொன் கணன் - பொன்போலும் நிறம் பொருந்திய கண்களே உடையவனுகிய இரணியாட்சன். ஆவி - உயிர். உண்ட - கவர்ந்த. புண்டரிகம் - தாமரை. அம்மான்: திருமால். குணங்கள் மூன்று: சத்துவம், இராசதம், தாமசம். செய்கை மூன்று: படைத்தல், காத்தல், அழித்தல். உருவம் மூன்று: பிரமன், திருமால், சிவன். கண்கள் மூன்று: சூரியன், சந்திரன், அக்கினி. சோதி - ஒளி. உலகம் மூன்று: சுவர்க்கம், பூமி, பாதலம். சரதம் - உண்மை, உறுதி.]

என்று பாடியுள்ளார்.

இவ்வுரையைக் கேட்ட இரணியன் சினத்துடன் சிரித்து, பிரகலாதனே நோக்கி, ''பேதாய்! நீ கூறும் திருமால் எங்கும் நிறைந்து தங்குகின்றான் என்கின்றாய். அஃது உண்மையா என்று சோதித்துப் பார்த்த பின்பு, யான் தக்கன செய்கின்றேன். நீ கூறும் திருடன் ஈண்டுள்ள இத் தூணில் உள்ளானே?

சொல்லுவாய்" என்றான். அதற்குப் பிரகலாதன், "என்ன! இத் தூணிலா? இத் தூணில் மட்டும் என்ன? அவன் சாணிலும் இருக்கின்றான்; அணுவினை நூறாகப் பகுக்கும் பகுப்பிலும் இருக்கின்றான்; மேரு மலையிலும் இருக்கின்றான்; ஈண்டுள்ள தூணிலும் இருக்கின்றான்; நீ சொன்ன சொல்லிலும் இருக்கின்றான். இவ்வுண்மையை நீயே சோதித்து உணரலாம்" என்றான். பிரகலாதனது இவ்வுரையைக் கம்பர் அழகு பொருந்துமாறு,

"சாணிலும் உளன்ஓர் தன்மை
அணுவினைச் சதகூறு இட்ட
கோணிலும் உளன்மா மேருக்
குன்றினும் உளன்இந் நின்ற
தூணிலும் உளன்நீ சொன்ன
சொல்லினும் உளன்இத் தன்மை
காணுதி விரைவின் என்றான்
நன்றுஎனக் கனகன் சொன்னான்."

[அணு - மிகச் சிறிய பொருள். சதம் - நூறு. கோணினும் - பகுப்பிலும். குன்று - மலை. காணுதி - காண்பாயாக. கனகன் - பொன்னிறமுடையவனாகிய இரணியன்.]

என்னும் பாடலில் அமைத்துள்ளார்.

இவ்வாறு பிரகலாதன் சொல்லிய அளவில், இரணியன் அவனை நோக்கி, "அறிவிலீ! தேவர்கட்

கும் உனக்கும் உதவி செய்து, உலகம் முழுவதும் நிறைந்துள்ள திருமாலை நீ இக் கம்பத்தினிடத்தே காட்டுக. அவ்வாறு நீ காட்டாவிடில், யானையை வலிய சிங்கம் கொல்லுதல் போல, உன்னை யான் எளிதில் கொல்வேன்; உன் இரத்தத்தைக் குடிப்பேன்! நின் உடம்பைத் தின்பேன்'' என்றான். தந்தையின் பேதைமையைக் கண்ட பிரகலாதன் நகைத்து, ''என் உயிரை உம்மால் கவர முடியாது. அது கிடக்க. யான் சொன்ன திருமால் நீர் தொட்ட இடங்களிலெல்லாம் தோன்றுவார். அவர் அவ்வாறு தோன்றாமல் போவாரே யாயின் யானே என் உயிரை மாய்த்துக்கொள்வேன். அவ்வாறு செய்யாவிடில், யான் அக் கடவுளுக்கு அடியவன் அல்லேன்'' என்றான்.

அவ்வளவில் இரணியன் எழுந்து, சினத்துடன் நகைத்து, தன் எதிரில் நின்ற தூணைத் தன் கையினால் இடிவிழுந்தாற்போல அறைந்தான். அவ்வாறு அறைந்தவுடனே, திருமால் நரசிங்கமூர்த்தியின் உருவுடன் அத்தூணின் உட்புறத்திலிருந்தவாறு பேரொலி எழுப்பிச் சிரித்தார். இச் செய்தியைக் கம்பர்,

'' நசைதிறந்து இலங்கப் பொங்கி
நன்றுநன்று என்ன நக்கு
விசைதிறந்து உருமு வீழ்ந்தது
என்னஓர் தூணின் வென்றி

இசைதிறந்து உயர்ந்த கையால்
எற்றினன் எற்ற லோடும்
திசைதிறந்து அண்டம் கீறிச்
சிரித்தது செங்கண் சீயம்."

[நகை - பரிகாசக் கருத்து. இலங்க - விளங்கும்படி. நக்கு - சிரித்து. விசை - விரைவு. உருமு - இடி. இசை - புகழ். எற்றினன் - அறைந்தான். எற்றலோடும் - அறைந்த அளவில். செங்கண் சீயம் - சிவந்த கண்களை உடைய சிங்கம்; நரசிங்க மூர்த்தி.]

என்று பாடியுள்ளார்.

நரசிங்கமூர்த்தியின் சிரிப்பொலி கேட்ட பிரகலாதன் பெருமகிழ்ச்சி கொண்டான்; ஆடினான்; பாடினான்; அரற்றினான்; தலைமீது கைகளைக் குவித்தான்; தொழுதான்; ஓடினான்; துள்ளினான். ஆயின் நரசிங்கமூர்த்தியின் சிரிப்பொலி இரணியனது சினத்தைத் தூண்டியது. அவன், "சிரித்த நீ யாரடா? இச் சிறுவன் சொன்ன திருமால் நீதானே? எனக்கு அஞ்சி ஓடிக் கடலில் ஒளிந்துகொண்டாயே! அது போதாதென்று, இத் தூணினுள்ளும் ஒளிந்துகொள்கின்றாயோ? அடே, நீ என்னுடன் போர் செய்ய வல்லையாயின், இப்பொழுதே புறப்பட்டு வா; வெளியில் வா; விரைவில் வா" என்றான். அவ்வளவில் அத்தூண் பிளந்தது. பேருருவுடன் நரசிங்கப்பிரான் வெளியில் தோன்றினார்.

ஆஆ! அப் பெரிய உருவின் நிலேதான் என்னே! நரசிங்கப்பிரானது தோற்றத்தை எம்மனோரால் வருணிக்க இயலுமோ? அவருடைய உருவம் வானத்தின் எல்லேயையும் தாண்டி நிமிர்ந்து சென்றிருந்தது; மனித வடிவத்தில் இருந்தது; சிங்க வடிவத்திலும் இருந்தது; முகமும் நகங்களும் சிங்கத்தினுடையவை போல் விளங்கின. அவ்வுருவிற்குக் கணக்கற்ற கைகள் இருந்தன. அவை அசுரர்களே யெல்லாம் பற்றிக்கொண்டன. ஒவ்வோர் அசுரனுக்கு எதிரிலும் ஒவ்வொரு நரசிங்க முகம் தோன்றியது.

இவ்வாறு பேருருவம் கொண்ட நரசிங்கப்பிரான் அசுரர்களே யெல்லாம் கொன்று குவித்தார்; ஒவ்வோர் அசுரனேயும் ஒவ்வொரு விதமாகக் கொன்ருர்; அவர் சிலரைக் கடித்துக் கொன்ருர்; சிலரைத் தேய்த்துக் கொன்ருர்; சிலரை மோதிக் கொன்ருர்; சிலரைப் பிசைந்து கொன்ருர்; சிலரைக் கடலில் ஆழ்த்திக் கொன்ருர்; சிலரைத் துண்டித்தார்; சிலரைக் கிழித்தார்; சிலரை உரித்தார்; சிலருடைய கண்களேத் தோண்டினர்; சிலருடைய குடர்களே அறுத்தார். இவ்வளவேயோ? நரசிங்கப் பெருமானர் இரணியனுடைய யானேகளேயும் தேர்களேயும் குதிரைகளேயும் கடித்துத் தின்ருர்; ஏழு கடல்களேக் குடித்தார். இத்தகைய சிங்கப்பெருமானின் திரு

உருவத் தோற்றத்தையும் செய்கையையும் கம்பர் பலவாறு பாடியுள்ளார். அவர்,

"மன்றலம் துளப மாலை
மானுட மடங்கல் வானில்
சென்றது தெரிதல் தேற்றும்
சேவடி படியில் தீண்ட
நின்றதோர் பொழுதின் அண்ட
நெடுமுகட் டிருந்த முன்னோன்
அன்று அவன் உந்தி வந்தா
னும்எனத் தோன்றி னானால்."

"எத்துணை போதுங் கைகளென்று
இயம்பினால் எண்ணற்கு ஏற்ற
வித்தகர் உளரே அந்தத்
தானவர் விரிந்த சேனை
பத்துநூறு அமைந்த கோடி
வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனை கடலும் மாளத்
தனித்தனி அள்ளிக் கொண்ட."

"ஆயிரங் கோடி வெள்ளத்து
அயில்எயிற்று அவுணர்க்கு அங்கு
ஏயின ஒருவர்க்கு ஓரோர்
திருமுகம் இரட்டிப் போற்றோன்

தீயெனக் கனலும் செங்கண்
சிரந்தோறும் மூன்றும் தெய்வ
வாயினில் கடல்கள் ஏழும்
மலைகளும் மற்றும் முற்றும்.''

" முடங்குவார் உனை அவ் வண்டம்
முழுவதும் முடிவின் உண்ணும்
கடங்கொள்வெங் காலச் செந்தீ
அதனைவந் தழிக்கும் கால
மடங்கலின் உயிர்ப்பு மற்றக்
காற்றினை மாற்று மானல்
அடங்கலும் பகுவா யாக்கை
அப்புறத் தகத்தது அம்மா.''

" குயிற்றிய அண்டங் குஞ்சை
இட்டிலா முட்டை முட்டப்
பயிற்றிய பருவம் ஒத்த
காலத்துள் அமுது பல்கும்
எயிற்றுவன் பகுவாய் உள்புக்கு
இருக்குந இருக்கை எய்தி
வயிற்றின்வந் தந்நாள் இந்நாள்
வாழுமன் னுயிர்கள் மன்னே.''

" நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ
கேடுநான் முகத்தோ னுதி
தொன்மையின் தொடர்ந்த வாய்மை
அறத்தொடும் தொடர்ந்தி லோரை

அன்வயித் தோருந் தீய
அவுணரல் லாரை அந்நாள்
தன்வயிற் றகத்து வைத்துத்
தந்ததச் சியம் தாயின்.''

என்று நரசிங்கப் பெருமானின் திருவுருவத்தையும்,

'' பேருடை அவுணர் தம்மைப்
பிறைஎயிற்று அடக்கும் பேராப்
பாரிடைத் தேய்க்கும் மீளப்
பகிரண்டத்து அடிக்கும் பற்றி
மேருவில் புடைக்கும் மாள
விரல்களில் பிசையும் வேலை
நீரிடைக் குமிழி யூட்டும்
நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்.''

'' வகிர்ப்படத் துணிக்கும் பற்றி
வாய்களைப் பிளக்கும் வன்தோல்
துகிற்படுத்து உரிக்கும் செந்தீக்
கண்களைச் சூலும் சுற்றிப்
பகிர்ப்படக் குடரைக் கொய்யும்
பசைஅறப் பிசையும் பல்கால்
உகிர்ப்புரை புக்கோர் தம்மை
உகிர்களால் உறக்கும் ஊன்றி.''

* * *

"முப்புறத்து உலகத் துள்ளும்
ஒழிவற முற்றும் பற்றித்
தப்புதல் இன்றிக் கொன்று
தையலார் கருவும் தள்ளி
இப்புறத்து அண்டத் தியாரும்
அவுணர்இல் லாமை எற்றி
அற்புறத்து அண்டம் தோறும்
தடவின சிலகை அம்மா."

[மன்றல் - நறுமணம். மானுட மடங்கல் - நரசிங்க மூர்த்தி. தேற்றும் - அறியமாட்டோம். படி - பூமி. முகடு - உச்சி. முன்னோன் : பிரமன். உந்தி - கொப்பூழ். வித்தகர் - திறமை உடையவர். தானவர் - அசுரர். கடலும் - படைக்கடலும் மான - அழிய. அயில் - கூர்மை. எயிறு - பல். இரட்டிப்பொற்றேள் - இரண்டிரண்டு கைகள். சிரம் - தலை. முடங்கு - மடங்கிய. வார் - நீண்ட; உளை - பிடரி மயிர். கடம் - கடமை. கால - யுக முடிவுக்காலத்து. உயிர்ப்பு - மூச்சு. பகு - பிளந்த. யாக்கை - உடம்பு. குயிற்றிய - படைக்கப்பெற்ற. முட்ட - அணைந்து. பயிற்றிய பருவம் - அடைகாக்கின்ற காலம். பல்கும் - ஊறும். இருக்குந - இருப்பன ஆயின. அந்நாள் - அந்தப் பிரளய காலத்தில். நான்முகத்தோன் - பிரமன். தொன்மையில் - தொன்று தொட்டு, பழங்காலமுதல். அன்வயித்தோர் - சேர்ந்தவர். சியம்-சிங்கம். தாயின்-தாயைப்போல. பேரா - பேர்த்தெடுத்து. புடைக்கும் - அடிக்கும். வேலை - கடல். நெருப்பு - கடலில் உள்ள வடவைத் தீ. வகிர் - பிளவு. துகில்படுத்து - துணியைக் கிழிப்பதுபோல. சூலும் - தோண்டும். பகிர் - துண்டு. உகிர்ப்புரை - நகச் சந்து. முப்புறத்து - மூன்று வகையான. தையலார் - மகளிர்.]

என்று நரசிங்கப் பிரானின் செயலையும் பாடியுள்ளார்.

இவ்வாறு இரணியனுடைய் படைவீரர்களையும், எல்லா உடைமைகளையும் சிங்கப்பிரானார் அழித்து விட்டார். இரணியனும் பிரகலாதனுமே எஞ்சி நின்றனர். நிகழ்ந்தவற்றைக் கண்டான் இரணியன். அந்நிலையிலும் அவன் நல்லறிவு பெற்றானல்லன். அவன் வாளையும் கேடகத்தையும் எடுத்தான்; பேரொலி எழுமாறு உரப்பினான்; நரசிங்க மூர்த்தியுடன் போர்புரிய முன்வந்தான். அது காலையில் பிரகலாதன் தன் தந்தையை நோக்கி, "தந்தையே! தாங்கள் இன்னமும் உண்மையை உணர்ந்திலீரே! என்னே பரிபவம்! இப்பொழுதேனும் எம்பெருமானை வணங்குங்கள். வணங்கிய அளவில், தாங்கள் இது வரை செய்துள்ள பிழைகளை யெல்லாம் அவர் பொறுத்துவிடுவார்" என்றான்.

கெடுமதி கண்ணுக்குத் தோன்றுமோ? பிரகலாதனது உரை இரணியனது மனத்தை மாற்றுமோ? அவன் பிரகலாதனை நோக்கி, "அட அறிவற்றவனே! கேள்; இவனையா வணங்கச் சொல்லுகின்றாய்! வணங்குதல் என்பது என் அகராதியில் இல்லை என்பதை நீ அறியாயோ? எனது காதலுக்குரிய மகளிருடைய ஊடலைத் தணிக்குங் காலத்தே கூட யான் வணங்கும் வழக்கம் இல்லையே. ஆயின்

ஒன்றே ஒன்றை மட்டும் யான் வணங்குவேன். எதனை! இங்கு இப்பொழுது தோன்றியுள்ள இச் சிங்கத்தின் கைகளையும் கால்களையும் வெட்டி, கொன்று, பிறகு உன்னையும் கொன்று, அத்தகைய வெற்றியை எனக்குத் தந்த இவ்வாளைத்தான் யான் வணங்குவேன்" என்று கூறி, அண்டங்கள் நடுங்கு மாறு சிரித்தான்.

பின்பு இரணியன் நரசிங்கமூர்த்தியுடன் போர் புரிய நெருங்கினன். அவ்வளவில் அவர் இரணிய னைச் சில கைகளால் பிடித்தார்; சில கைகளால் அவ னுடைய கால்கள் இரண்டையும் ஒரு சேரப்பிடித்துச் சுழற்றினார்; பின்பு அவனை அழுத்தியவாறு, தம் கைகளின் நகங்களால் அவனது மார்பைப் பிளந்து கொன்றார். அவ்வளவில் எங்கும் இரத்த வெள்ளம் பரந்தது.

இவ்வாறு அவர் இரணியனைப் பிளந்து கொன்ற நேரம் அந்திப் பொழுதாகும்; பிளந்த இடம் அவனது அரண்மனையின் வெளி வாயிற் படி ஆகும். தமது துடையில் அவனைக் கிடத்தித் தம்முடைய நகங்களாலேயே அவனது மார்பைப் பிளந்து நரசிங்கப்பிரான் கொன்றுவிட் டார். பகலிலும் இரவிலும் சாவாத வரத்தை அவன் பெற்றிருந்தமையாலேயே அவனை நரசிங்கமூர்த்தி அந்தி நேரத்தில் கொன்றார். வீட்டின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சாவாத வரத்தை அவன் பெற்

றிருந்த காரணத்தால்தான் அவர் அவனை வாயிற் படியில் கொன்றார். பூமியிலும் ஆகாயத்திலும் சாவாத வரம் அவனுக்கு இருந்தமையாலேயே அவனை அவர் தமது துடையின்மீது கிடத்தினார். படைக்கலங்களால் தனக்கு இறப்பு உண்டாதல் கூடாது என்று அவன் வரம் பெற்றிருந்தமையால் தான் அவர் அவனைத் தம்முடைய நகங்களால் கொன் றார். மனிதராலும் விலங்குகளாலும் தான் சாதல் கூடாது என்ற வரம் அவனுக்கு இருந்தமையாலேயே அவர் மனிதப் பகுதியிலும் மிருகப் பகுதியிலும் சேராத நரசிங்க உருவுடன் தோன்றினார். இங்ஙன மாக இரணியன் பெற்றிருந்த வரங்கள் பழுதுபடா வண்ணம் நரசிங்கப் பெருமானார் அவனைக் கொன்ற ருளினார். இச்செய்தியைக் குறிப்பிட்டு, சிங்கவேள் குன்றத்தைப்பற்றித் தாம் பாடியுள்ள பெரிய திரு மொழியில் திருமங்கையாழ்வார்,

“ அங்கண் ஞாலம் அஞ்சஆங்கோர்
ஆள் அரி யாய் அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால்
போழ்ந்த புனிதனிடம்
பைங்கண் ஆனைக் கொம்புகொண்டு
பத்திமை யால் அடிக்கீழ்ச்
செங்கண் ஆளி இட்டிறைஞ்சும்
சிங்கவேள் குன்றமே.”

[ஞாலம் - பூமி. ஆள் அரி - நரசிங்கம். அவுணன்: இரணியன். ஆகம் - மார்பு; வண் - கூர்மை. உகிர் - நகம். போழ்ந்த - பிளந்த. புனிதன் - தூயவன். பத்திமையால் - பக்தித் தன்மையால். ஆளி - சிங்கம்.]
என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

8. பிரகலாதனுக்குச் சிங்கப்பிரான் முடிசூட்டுதல்

இரணியனைக் கொன்று, தேவர்களுடைய துன்பத்தைத் துடைத்த பின்னரும் நரசிங்கப் பெருமானது சீற்றம் தணிந்திலது. அவ்வுருவத்தைக் கண்ட தேவர்கள் யாவரும் அஞ்சி நடுங்கினர். அது கண்ட பிரமதேவர் நரசிங்கமூர்த்தியைப் பலவாறு துதிக்கத் தொடங்கி, "சிங்கப்பிரானே! உன்னைப் படைத்தவன் நீயே. அங்ஙனம் இருக்கும்பொழுது, எனக்கு நீ படைத்தல் தொழிலைத் தந்தாயே! இஃது உனது திருவிளையாடல் அன்றோ? யாவும் உன்னிடமிருந்தே தோன்றியுள்ளன. அவ்வாறு தோன்றியவற்றை நீயே அழித்தல் தக்கதோ? அன்பு கூர்ந்து, இவ்வுருவை அடக்கிக்கொண்டருள்க. உன் அருளால் யான் தோன்றினேன்; உன் அருளாலேயே யான் எல்லாவற்றையும் படைக்கின்றேன். எனக்குத் தந்தையும் தாயும் நீயே. உன்னையன்றி எனக்கு வேறு யார்? பொன்னால் அமைந்ததொரு பொன்

ன்ணியைப் போல் யான் உள்ளேன். எனக்கென்று ஒரு செயலும் இல்லை. யாவும் நின் செயலே. எனவே நீ சீற்றம் தணிந்தருள்க'' என்று பலவாறு போற்றி வேண்டினர். சிங்கப்பிரானும் தமது சீற்றம் அடங்கப் பெற்றார்.

பின்பு பிரமதேவர் முதலியோர் திருமகளை நரசிங்க மூர்த்தியினிடம் செல்ல விடுத்தனர். திருமகளும் சிங்கப்பிரான் அருகில் சென்றார். பெருமானார் திருமகளை அருளுடனும் நோக்கினர். அதுகாலையில் அவரது சீற்றம் முழுவதும் அடங்கிவிட்டது. அதன் பின் அவர் பிரகலாதனை அருளோடு நோக்கி, "அன்புடைச் சிறுவ! எம்மிடம் நீ பேரன்பு வைத்தாய். உனக்கு எதிரிலேயே உன் தந்தையை யாம் கொன்றோம். அதனைக் கண்டும், நீ எம்மிடம் அன்புடன் இருக்கின்றாய். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்'' என்றார்.

தன்னை மறந்த நிலையில் இருந்த பிரகலாதன், சிங்கப்பெருமானது உரையைக் கேட்டு,பெருமகிழ்ச்சி அடைந்து, அவரை நோக்கி, "எந்தாய்! தங்களிடம் பக்தி செலுத்தும் பேறே எனக்கு அருமையான வரமாகும்'' என்றான். அது கேட்ட சிங்கப்பிரான் மகிழ்ந்து, அவனை அருளுடன் நோக்கி, "அப்பா! நீ என்னைப் போலவே எந்நாளும் அழியாமல் இருப்பாய். உன்னைத் துதிப்போர், என்னைத் துதித்தலால்

அடையும் பயனைப் பெறுவர். யாவரும் உனது சொற்படியே நடப்பார்கள். நீ சிறப்புடன் வாழ்வாயாக'' என்று வரங்களைக் கொடுத்தார்.

சிங்கப்பிரான் பிரகலாதனை நோக்கிக் கூறிய அன்புரையையும், அவன் வரம் கேட்ட பான்மையையும், பெருமானுர் அவனுக்கு வரங்கொடுத்த தன்மையையும் கம்பர்,

சிங்கப்பிரான் கூறிய அன்புரை

" உந்தையைஉன் முன்கொன்று
உடலைப் பிளந்தனையச்
சிந்தை தளராது
அறம்பிழையாச் செய்கையால்
அந்தமிலா அன்புஎன்மேல்
வைத்தாய் அளியத்தாய்
எந்தை இனியிதற்குக்
கைம்மாறு யாதுஎன்றான்.''

" அயிரா இமைப்பினைஓர்
ஆயிரம் கூறிட்ட
செயிரின் ஒருபொழுதின்
உந்தையை யாம்சீறி

உயிர்நேடு வேம்போல்
உடல்அலையக் கண்டும்
செயிர்சேரா உள்ளத்தாய்க்கு
என்இனி யாம்செய்கேம்.''

"கொல்லேம் இனிஉன்
குலத்தோரைக் குற்றங்கள்
எல்லை இலாதன
செய்தாரே என்றாலும்
நல்லேம் உனக்குஎம்மை
நாணுமல் நாம்செய்வது
ஒல்லை உளதேல்
இயம்புதியால் என்றுரைத்தான்.''

பிரகலாதன் வரம் கேட்ட பான்மை

"முன்பு பெறப்பெற்ற
பேறே முடிவில்லை
பின்பு பெறும்பேறும்
உண்டோ பெறுகுவனேல்
என்பு பெறாத
இழிபிறவி எய்தினும்நின்
அன்பு பெறுகை
அரும்பேறு எனக்கென்றான்.''

சிங்கப்பிரான் வரம் கொடுத்தருளுதல்

“ அன்னனை நோக்கி
அருள்சுரந்த நெஞ்சினனாய்
என்னனை வல்லன்
எனமகிழ்ந்த பேரீசன்
முன்னான பூதங்கள்
யாவையும் முற்றிடினும்
எந்நாளும் உலவாய்நீ
என்போல் உளை என்றான்.”

“ மின்னைத் தொழுவளைத்தது
என்ன மிளிர்ஒளியாய்
முன்னைத் தொழும்புஉனக்கே
ஆம்அன்றே மூவுலகும்
என்னைத் தொழுதுஏத்தி
எய்தும் பயன்எய்தி
உன்னைத் தொழுதுஏத்தி
உய்க உலகெல்லாம்.”

“ ஏனவர்க்கு வேண்டின்
எளிதுஒன்றோ எதற்குஅன்பர்
ஆனவர்க்கும் எல்லாம்
நினக்குஅன்பர் ஆயினர்

தானவர்க்கு வேந்தன்நீ
என்னும் தரத்தாயோ
வானவர்க்கு நீயே
இறைதொன் மறைவல்லோய்."

"நல்லறமும் மெய்ம்மையும்
நான்மறையும் நல்அருளும்
எல்லையின் ஞானமும்
ஈறிலா எப்பொருளும்
தொல்லைசால் எண்குணனும்
நின்சொல் தொழில்செய்க
வல்ல உருவொளியாய்
நாளு வளர்கநீ."

[உந்தை - உன் தந்தை. அளைய - அளைந்து கொல்ல. அந்தம் - எல்லை. அளியத்தாய் - அருள் செய்யத் தக்கவனே. எந்தை - அப்பா. கைம்மாறு - பதில் உதவி. இமைப்பு - ஒரு மாத்திரை அளவு. செயிர் - குற்றம், துன்பம். நேடுதல் - தேடுதல். நல்லேம் - நல்லவராக இருப்போம். நாணுமல் - கூச்சம் இன்றி. செய்வது - செய்ய வேண்டிய உதவி. ஒல்லை - விரைவில். இயம்புதி - சொல்வாயாக. பேறு - நன்மை. பெறுகை - பெறுதல். அரும் பேறு - அரிய வரம். அன்னனை - அவ்வாறு சொல்லிய பிரகலாதனை. என்னனை - எனது அன்பன். முற்றிடினும் - அழிந்தாலும். உலவாய் - அழியாய். உளை - உள்ளவனுவாய். தொழு - தொழுமரம். மிளிர் - விளங்குகிற. தொழும்பு - அடிமை. உய்க - வாழக்கடவன. ஏனவர்க்கு - மற்றையோர்க்கு. எற்கு - எனக்கு. வர்க்கம் - கூட்டம்,

வகை. தானவர் - அசுரர். இறை - அரசன். தொல் - பழமையான. மெய்ம்மை - உண்மை. ஈறு இலா - முடிவில்லாத. தொல்லை - பழைமை. சால் - மிக்க. தீவினை, மூப்பு, மரணம், துயரம், பசி, தாகம் ஆகிய ஆறும் இல்லாமையும், உண்மையில் விருப்பம், எண்ணம் தவருமல் பலிக்கும் தன்மை ஆகிய இரண்டும் உடைமையும் எண் குணங்கள் எனப்படும். நானு - என்னைப்போலவே.]

என்று பாடியுள்ளார்.

முடிவில் நரசிங்கமூர்த்தி, மூவுலகங்கட்கும் அரசனுக இருக்குமாறு பிரகலாதனுக்கு முடிசூட்டி அருளினர். அதுபொழுது இந்திரன் குற்றேவல் புரிந்தான்; பிரமதேவர் ஓமம் வளர்த்து, வைதிகச் சடங்குகளைச் செய்தார். இவ்வாறு நரசிங்கப்பெருமானுல் முடி சூட்டப்பெற்ற பிரகலாதன், மூவுலகங்கட்கும் அரசனுகி, மிக உயர்ந்த பதவியைப் பெற்றுன். இச் செய்தியைக் கம்பர்,

"தேமன் உரிமை புரியத் திசைமுகத்தோன்
ஓமம் இயற்ற உடையான் முடிசூட்டக்
கோமன் னவனுகி மூவுலகும்
[கைக்கொண்டான்
நாம மறைஓதாது ஓதி நனிஉயர்ந்தான்."

[தேமன்: தேவர்கட்கு அரசனுகிய இந்திரன். உரிமை- உரிய குற்றேவல். திசை முகத்தோன்: பிரமதேவர். உடையான்: சிங்கப்பிரான். கோ - அரசர். நாமம் -

பெருமை. நனி - மிகுதியாக. உயர்ந்தான் : உயர்ந்த வனுகிய பிரகலாதன்.]

என்று பாடியருளியுள்ளார்.

9. சிங்கப்பிரானும் திவ்வியப் பிரபந்தமும்

ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களின் தொகுதி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும். ஆழ்வார்கள் நரசிங்கமூர்த்தியைப் பல பாசுரங்களில் போற்றியுள்ளனர். நரசிங்கப்பிரான் இரணியனைக் கொன்ற வரலாறு அவற்றுள் குறிப்பிடப் பெறுகின்றது. அத்தகைய பாடல்களுள் சில வருமாறு :—

பெரியாழ்வார் திருமொழி

கோளரி யின்உருவங் கொண்டுஅவு ணனுடலம்
    குருதி குழம்பிஎழக் கூருகிரால் குடைவாய்
மீளஅ வன்மகனை மெய்ம்மை கொளக்கருதி
    மேலை அமரர்பதி மிக்கு வெகுண்டுவர
காளநன் மேகமவை கல்லொடு கால்பொழியக்
    கருதி வரைக்குடையாக் காலிகள் காப்பவனே
ஆள எனக்கொருகால் ஆடுக செங்கீரை
    ஆயர்கள் போர்ஏறே ஆடுக ஆடுகவே. 1

அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்
உளம்தொட்டு இரணியன் ஒண்மார் வகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி
பேய்முலை உண்டானே சப்பாணி. 2

கதிரா யிரமிரவி கலந்தெரித்
தால்ஒத்த நீள்முடியன்
எதிரில் பெருமை இராமனை
இருக்குமிடம் நாடுதிரேல்
அதிரும் கழற்பொருதோள் இரணிய
னாகம் பிளந்துஅரியாய்
உதிரம் அளைந்தகை யோடிருந்தானை
உள்ளவா கண்டாருளர். 3

உரம்பற்றி இரணியனை உகிர்நுதியால்
ஒண்ணிய மார்பு உறைக்கவூன்றி
சிரம்பற்றி முடிஇடியக் கண்பிதுங்க
வாயலறத் தெழித்தான்கோயில்
உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த
சேவடிபோல் உயர்ந்துகாட்ட
வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்
தலைவணக்கும் தண்ணரங்கமே. 4

—பெரியாழ்வார்.

நாச்சியார் திருமொழி

வான்கொண்டு கிளர்ந்தெழுந்த
மாமுகில்காண் வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத்
திரண்டேறிப் பொழிவீர்காள்
ஊன்கொண்ட வள்ளுகிரால்
இரணியனை உடல்இடந்தான்
தான்கொண்ட சரிவளைகள்
தருமாகில் சாற்றுமினே. 5

—ஆண்டாள்.

திருச்சந்த விருத்தம்

வால்நி றத்தோர் சீயமாய்
வளைந்த வாளெ யிற்றவன்
ஊன்நி றத்து கிர்த்தலம்
அழுத்தி னாய்உ லாயசீர்
நால்நி றத்த வேதநாவர்
நல்ல யோகி னால்வணங்கு
பால்நி றக்க டல்கிடந்த
பற்ப நாபன் அல்லையே? 6

—திருமழிசையாழ்வார்.

முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்

பெரிய திருமொழி

மறங்கொள் ஆளரி உருவென வெருவர
ஒருவனது அகல்மார்வம்
திறந்து வானவர் மணிமுடி பணிதர
இருந்தந விமயத்துள்
இறங்கி ஏனங்கள் வளைமருப் பிடந்திடக்
கிடந்தரு கெரிவீசும்
பிறங்கு மாமணி அருவியொ டிழிதரு
பிருதிசென் றடைநெஞ்சே. 7

அங்கண் ஞாலம் அஞ்சஅங்கு ஓர்
ஆள்அரி யாய்அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால்
போழ்ந்த புனிதனிடம்
பைங்கண் ஆனைக் கொம்புகொண்டு
பத்திமை யால்அடிக்கீழ்ச்
செங்கண் ஆளி இட்டிறைஞ்சும்
சிங்கவேள் குன்றமே. 8

அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர்
கோளரி யாய்அவுணன்
கொலைக்கை யாளன் நெஞ்சிடந்த
கூருகி ராளனிடம்

மலைத்த செல்சாத் தெறிந்தபூசல்
வன்துடி வாய்கடுப்ப
சிலைக்கை வேடர் தெழிப்பருத
சிங்கவேள் குன்றமே. 9

ஏய்ந்த பேழ்வாய் வாளெயிற்றோர்
கோளரி யாய்அவுணன்
வாய்ந்த ஆகம் வள்ளுகிரால்
வகிர்ந்தஅம் மானதிடம்
ஓய்ந்த மாவும் உடைந்தகுன்றும்
அன்றியும் நின்றுஅழலால்
தேய்ந்த வேயு மல்லதில்லாச்
சிங்கவேள் குன்றமே. 10

எவ்வம் வெவ்வேல் பொன்பெயரோன்
ஏதலன் இன்னுயிரை
வவ்வி ஆகம் வள்ளுகிரால்
வகிர்ந்தஅம் மானதிடம்
கவ்வு நாயும் கழுகும்உச்சிப்
போதொடு கால்சுழன்று
தெய்வம் அல்லால் செல்லவொண்ணுச்
சிங்கவேள் குன்றமே. 11

மென்ற பேழ்வாய் வாளெயிற்றோர்
கோளரி யாய்அவுணன்
பொன்ற ஆகம் வள்ளுகிரால்
போழ்ந்த புனிதனிடம்
நின்ற செந்தீ மொண்டுசூறை
நீள்விசும் பூடிரியச்
சென்று காண்டற் கரியகோயில்
சிங்கவேள் குன்றமே. 12

எரிந்த பைங்கண் இலங்குபேழ்வாய்
எயிற்றொடுஇது எவ்வுருவென்று
இரிந்து வானோர் கலங்கியோட
இருந்தஅம் மானதிடம்
நெரிந்த வேயின் முழையுள்நின்று
நீள்நெறி வாய்உழுவை
திரிந்த ஆனைச் சுவடுபார்க்கும்
சிங்கவேள் குன்றமே. 13

முனைத்த சீற்றம் விண்சுடப்போய்
மூவுல கும்பிறவும்
அனைத்தும் அஞ்ச ஆளரியாய்
இருந்தஅம் மானதிடம்

கனைத்த தீயும் கல்லுமல்லா
வில்லுடை வேடருமாய்
தினைத்த னையும் செல்லவொண்ணச்
சிங்கவேள் குன்றமே. 14

தூணாய் அதனூடு அரியார் வந்துதோன்றி
பேண அவுணன் உடலம் பிளந்திட்டாய்
சேணார் திருவேங் கடமா மலைமேய
கோணா கனையாய் குறிக்கொள் எனைநீயே. 15

பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில்ஓர் ஆயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போதஆங்கு அதனுக்கு
ஒன்றுமோர் பொறுப்பில னாகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப்
பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
திருவல்லிக் கேணிகண் டேனே. 16

பொங்கி அமரில் ஒருகால்
பொன்பெய ரோனை வெருவ
அங்குஅவ னாகம் அளைந்திட்டு
ஆயிரம் தோள்எழுந் தாட

பைங்கண் இரண்டு எரிகான்ற
நீண்ட எயிற்றொடு பேழ்வாய்ச்
சிங்க உருவின் வருவான்
சித்திர கூடத் துள்ளானே. 17

திண்ணியதோர் அரியுருவாய்த் திசையனைத்தும் நடுங்கத்
தேவரொடு தானவர்கள் திசைப்ப இரணியனை
நண்ணிஅவன் மார்வகலத்து உகிர்மடுத்த நாதன்
நாள்தோறும் மகிழ்ந்துஇனிது மருவியுறை கோயில்
எண்ணில்மிகு பெருஞ்செல்வத்து எழில்விளங்கு மறையும்
ஏழிசையும் கேள்விகளும் இயன்றபெருங் குணத்தோர்
மண்ணில்மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே. 18

ஓடாதே வாளரியின் உருவமது கொண்டன்று
உலப்பில்மிகு பெருவரத்த இரணியனைப் பற்றி
வாடாத வள்ளுகிரால் பிளந்துஅவன்தன் மகனுக்கு
அருள்செய்தான் வாழுமிடம் மல்லிகைசெய் கழுநீர்

சேடேறு மலர்ச்செருந்தி செழுங்கமுகம் பாளைச்
செண்பகங்கள் மணம்நாறும் வண்பொழிலி [னூடே
ஆடேறு வயலாலைப் புகைகமழும் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே. 19

ஓடாத வாள்அரியின் உருவாகி இரணியனை
வாடாத வள்ளுகிரால் பிளந்தளைந்த மாலதிடம்
ஏடேறு பெருஞ்செல்வத்து எழில்மறையோர்
நாங்கைதன்னுள்
சேடேறு பொழில்தழுவு திருத்தேவ னூர்தொகையே.
20

உளைய ஒண்திறல் பொன்பெய ரோன்தனது
உரம்பிளந்து உதிரத்தை
அளையும் வெஞ்சினத்து அரியரி கூறிய
அப்பன்வந்து உறைகோயில்
இளைய மங்கையர் இணையடிச் சிலம்பினோடு
எழில்கொள்பந் தடிப்போர்கை
வளையி னின்றொலி மல்கிய நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 21

முடியுடை அமரர்க்கு இடர்செய்யும் அசுரர்
தம்பெரு மானை அன்று அரியாய்
மடியிடை வைத்து மார்வமுன் கண்ட
மாயனார் மன்னிய கோயில்

படியிடை மாடத் தடியிடைத் தூணில்
பதித்தபன் மணிகளின் ஒளியால்
விடிபகல் இராவென்று அறிவரி தாய
திருவெள்ளி யங்குடி யதுவே. 22

பைங்கணு ளரியுருவாய் வெருவ நோக்கிப்
பருவரைத்தோள் இரணியனைப் பற்றி வாங்கி
அங்கைவாள் உகிர்நுதியால் அவன தாகம்
அங்குருதி பொங்குவித்தான் அடிக்கீழ் நிற்பீர்
வெங்கண்மா களிறுந்தி விண்ணி லேற்ற
விறல்மன்னர் திறலழிய வெம்மா உய்த்த
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 23

ஓடா அரியாய் இரணியனை ஊனிடந்த
சேடார் பொழில்சூழ் திருநீர் மலையானை
வாடா மலர்த்துழாய் மாலை முடியானை
நாள்தோறும் நாடி நறையூரில் கண்டேனே. 24

உளைந்த அரியும் மானிடமும்
உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து
விளைந்த சீற்றம் விண்வெதும்ப
வேற்றோன் அகலம் வெஞ்சமத்துப்
பிளந்து வளைந்த உகிரானைப்
பெருந்தண் செந்நெற் குலைதடிந்து
களஞ்செய் புறவிற் கண்ணபுரத்து
அடியேன் கண்டு கொண்டேனே. 25

பரிய இரணியனது ஆகம் அணிஉகிரால்
அரிஉருவாய்க் கீண்டான் அருள்தந்த வாநமக்கு
பொருதிரைகள் போந்துலவு புல்லாணி
கைதொழுதேன்
அரிமலர்க்கண் நீர்ததும்ப அந்துகிலும்
நில்லாவே. 26

கூடா இரணியனைக் கூருகிரால் மார்விடந்த
ஓடா அடலரியை உம்பரார் கோமானை,
தோடார் நறுந்துழாய் மார்வனை ஆர்வத்தால்
பாடாதார் பாட்டுஎன்றும் பாட்டல்ல
கேட்டாமே. 27

—திருமங்கையாழ்வார்.

இயற்பா — முதல் திருவந்தாதி

வயிறழல வாள்உருவி வந்தானை அஞ்ச
எயிறிலக வாய்மடித்த தென்நீ — பொறிஉகிரால்
பூவடிவை ஈடழித்த பொன்னாழிக் கையாநின்
சேவடிமேல் ஈடழியச் செற்று. 28

—பொய்கையாழ்வார்.

இயற்பா — இரண்டாம் திருவந்தாதி

வரங்கருதித் தன்னை வணங்காத வன்மை
உரங்கருதி மூர்க்கத் தவனை—நரங்கலந்த
சிங்கமாய்க் கீண்ட திருவன் அடியிணையே
அங்கண்மா ஞாலத்து அமுது. 29

—பூதத்தாழ்வார்.

இயற்பா — மூன்றும் திருவந்தாதி

அங்கற் கிடரின்றி அந்திப் பொழுதத்து
மங்க இரணியன தாகத்தைப் — பொங்கி
அரிஉருவ மாய்ப்பிளந்த அம்மா னவனே
கரியுருவம் கொம்பொசித்தான் காய்ந்து. 30

புகுந்திலங்கும் அந்திப் பொழுதத்து அரியாய்
இகழ்ந்த இரணியன தாகம் — சுகிர்ந்தெங்கும்
சிந்தப் பிளந்த திருமால் திருவடியே
வந்திந்துஎன் நெஞ்சமே வாழ்த்து. 31

—பேயாழ்வார்.

இயற்பா — நான்முகன் திருவந்தாதி

மாறாய தானவனை வள்ளுகிரால் மார்விரண்டு
கூறாகக் கீறிய கோளரியை — வேறாக
ஏத்தி இருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சார்த்தி இருப்பார் தவம். 32

—திருமழிசையாழ்வார்.

இயற்பா — பெரிய திருவந்தாதி

நின்றும் இருந்தும் கிடந்தும் திரிதந்தும்
ஒன்றுமோ ஆற்றான்என் நெஞ்சகலான்—அன்றங்கை
வன்புடையால் பொன்பெயரோன் வாய்தகர்த்து
மார்விடந்தான்
அன்புடையன் அன்றே அவன்? 33

—நம்மாழ்வார்.

இயற்பா — பெரிய திருமடல்

" —ஆயிரக்கண்
மன்னவன் வானமும் வானவர்தம் பொன்னுலகும்
தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட
தானவனை
பின்னோர் அரியுருவம் ஆகி எரிவிழித்துக்
கொல்நவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே —
வல்லாளன்

மன்னு மணிக்குஞ்சி பற்றி வரவீர்த்துத்
தன்னுடைய தாள்மேல் கிடாத்தி — அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகழ்படைத்த
மின்னிலங்கும் ஆழிப் படைத்தடக்கை வீரனை." 34

—திருமங்கையாழ்வார்.

திருவாய்மொழி

எங்கும் உளன்கண்ணன் என்றமகனைக்காய்ந்து
இங்கில்லையால்என்று இரணியன் தூண்புடைப்ப
அங்குஅப் பொழுதே அவன்வீயத் தோன்றியஎன்
சிங்கப் பிரான்பெருமை ஆராயும் சீர்மைத்தே. 35

கிளர்ஒளியால் குறைவில்லா
அரிஉருவாய்க் கிளர்ந்தெழுந்து
கிளர்ஒளிய இரணியனது
அகல்மார்வம் கிழித்துகந்த
வளர்ஒளிய கனலாழி
வலம்புரியன் மணிநீல
வளர்ஒளியான் கவராத
வரிவளையால் குறைவிலமே. 36

ஆகம் சேர்நர சிங்கம தாகிஓர்
ஆகம் வள்ளுகி ரால்பிளந் தானுறை
மாக வைகுந்தம் காண்பதற்கு என்மனம்
ஏகம் எண்ணும் இராப்பகல் இன்றியே. 37

அன்பனா கும்தன தாளடைந் தார்க்கெல்லாம்
செம்பொனா கத்தவு ணனுடல் கீண்டவன்
நன்பொ னேய்ந்தமதிள் சூழ்திருக் கண்ணபுரத்து
அன்பன் நாளும்தன் மெய்யர்க்கு மெய்யனே. 38

என்னெஞ்சத் துள்ளிருந்துஇங்கு
இருந்தமிழ்நூல் இவைமொழிந்து
வன்னெஞ்சத்து இரணியனை
மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப்
பாண்டவர்க்காப் படைதொட்டான்
நல்னெஞ்சே நம்பெருமான்
நமக்குஅருள்தான் செய்வானே. 39

பிரியாதுஆட் செய்யென்று
பிறப்பறுத்துஆள் அறக்கொண்டான்
அரியாகி இரணியனை
ஆகம்கீண் டான்அன்று
பெரியார்க்குஆட் பட்டக்கால்
பெறாதபயன் பெறுமாறு
வரிவாள்வாய் அரவணைமேல்
வாட்டாற்றான் காட்டினனே. 40

—நம்மாழ்வார்.

கம்பரும் இரணியன் கதையும்

தமிழ் நூல்களுள் பல, பக்தியைஅடிப்படையாகக் கொண்டே தோன்றின. சைவப் பெரியார்களும், வைணவ ஆழ்வார்களும், பௌத்த முனிவர்களும், சமணத் துறவிகளும் தத்தம் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் தமிழில் நூல்கள் பலவற்றை இயற்றினர். பிற சமயங்களைத் தாழ்த்தி, தம் சமயமே உயர்ந்தது என்று நாட்டும் கருத்துடன் சிலர் சமய நூல்களை இயற்றினர். சமய வெறியினுல் சில நூல்கள் தோன்றின. எனினும், சமயக் கருத்துக்களை விளக்கி, மக்களின் மனத்தில் கடவுட் கொள்கையை ஊட்டி, பக்தியைப் பரப்பும் உயர்ந்த நோக்கத்துடன் எழுந்த நூல்கள் பல. அவ்வாறு எழுந்த நூல்களுள் கம்பரது இராமாயணமும் ஒன்று என்று கூறலாம். சமயவெறி அந்நூலில் மருந்துக்கும் காணுதல் அரிது. சமயக் கருத்துக்கள் அந்நூலின்கண் நாகரிகமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. மக்களது மனத்தைப் பண்படுத்தி, அவர்களைக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தும் அரும்பெருந் தொண்டினைக் கம்பர் அந்நூலின் வாயிலாகச் செய்துள்ளார். வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் அவர் மக்களின் மனத்தே உள்ள மாசுகளை அகற்ற முயல்கின்ருர்; கடவுளின் அருளைப்பெற்று யாவரும் உய்தற்கு வழி கூறுகின்ருர்.

தமது இராமாயணத்தின் வாயிலாகக் கம்பர் மக்களுக்குக் கூறும் அறிவுரைகள் பல. உடன்பிறந்தவர்களிடையே இருக்க வேண்டிய அன்புத் தொடர்பு, தந்தை சொல்லேப் போற்றும் தன்மை, இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்ருக ஏற்கும் உயர்பண்பு, நட்பின் இலக்கணம், வீரத்தின் உண்மையான இலக்கணம், கற்பின் பொற்பு முதலியவற்றைக் கதையுடன் தொடர்புபடுத்தி அழகும் சுவையும் பொருந்த அவர் தம் நூலில் கூறியுள்ளார். இவற்றுக்கெல்லாம் மேலாக, அவர் மக்களின் மனத்தே கடவுட் கொள்கையை ஊட்ட முயல்கின்ருர். சில சமயங்களில் கடவுட் கொள்கையை ஊட்டுதற்கு வாய்ப்புக்களே அவரே உண்டாக்கிக் கொள்கின்ருர். அவ்வாறு உண்டாக்கிக் கொண்டமைக்கு எடுத்துக்காட்டுகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று 'இரணியன் வதைப் படலம்' ஆகும்.

கம்பர் தமது இராமாயணத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றிய காலேயில், 'இரணியன் வதைப்படலம்' இந்நூலில் இடம் பெற்றிருத்தலே உணர்ந்து சிலர், 'இவரது இராமாயணத்திற்கு முதல் நூல் வால்மீகி ராமாயணம் ஆகும். வால்மீகி ராமாயணத்திலோ இரணியன் வதையைப்பற்றிய நிகழ்ச்சி இடம் பெறவில்லை. முதல் நூலில் இல்லாத ஒரு செய்தியைக்

கம்பர் தம் நூலில் குறிப்பிட்டமை தக்கதன்று. இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்' என்று மறுப்புக் கூறினராம். அந்நிலையில் கம்பர், இப் பகுதியை மேட்டழகிய சிங்கரது சந்நிதியில் படித் துக் காட்டினராம். என்னே வியப்பு! இப்பகுதி படிக் கப்பெற்றபொழுது பெருமானர் தம் திருக்கரங்களை நீட்டி, திருமுடியை அசைத்து, மகிழ்ச்சியுடன் சிரிப் பொலியை வெளிப்படுத்தினராம். இந் நிகழ்ச்சியைக் கண்டோர், கம்பரது பெருமையை உணர்ந்து, இந் நூலை ஏற்றுக்கொண்டனராம். இவ்வரலாற்றிற்குச் சான்று இருப்பினும் இல்லாதொழியினும், இரணி யன் வதைப்படலம் கம்பரது கடவுட் கொள்கைக்குச் சான்றாக விளங்குகிறது என்பதை மறுப்பார் இலர். கடவுளின் தன்மைகளை எடுத்துக்கூறி, கடவுளிடத்தே மக்களது மனத்தைச் செலுத்துவதற்குக் கம்பர் படைத்துக்கொண்ட வாய்ப்புக்களுள் இப் படலமும் ஒன்று என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர் என்பது உறுதி.

ஆசிரியரிடம் வேதம் ஓதப் புகுந்த பிரகலாதன், 'ஓம் நமோ நாராயணாய' என்று கூறித் தனது கடவுள் பக்தியை முதற்கண் வெளிப்படுத்துகின்றான். இச்செய்தியை நமக்குக் கூறப்புகுந்த கம்பர்,

திருவேறு தெள்ளியராதலும் வேறு

"ஓம்நமோநாரா யணாயஎன்று
உரைத்துளம் உருகித்
தான்அமைந்திரு தடக்கையும்
தலைமிசைத் தாங்கிப்
பூநிறக்கண்கள் புனல்உக
மயிர்ப்புறம் பொடிப்ப
ஞான நாயகன் இருந்தனன்
அந்தணன் நடுங்க."

என்று பாடியுள்ளார். கடவுளிடத்தே கருத்தைச் செலுத்துங்கால் பிரகலாதனது நிலையைக் கூறுதல் போல் கம்பர் ஈண்டு மக்களுக்குக் கடவுள் பக்தியை வற்புறுத்துகின்றார். பின்பு பிரகலாதன் தன் குருவுக்கு அறிவுரை கூறுதலாக வரும் பகுதியில் கம்பர், யாவரும் கடவுளின் பெயரையே கூறுதல் வேண்டும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

"ஆரைச் சொல்லுவது அந்தணர்
அருமறை அறிந்தோர்
ஓரச் சொல்லுவது எப்பொருள்
உபநிடதங்கள்
தீரச் செய்வினை தேவரும்
முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவ தல்லது
பிறிதும்ஒன்று உளதோ?"

என்னும் பாடல் அதற்குச் சான்று பகரும்.

நாராயண நாமத்தின் பெருமை மதிப்பிட்டுக் கூற முடியாதது. எவ்வளவு நூல்களில் எடுத்துக் கூறினாலும், அந்த நாமத்தின் பெருமையை முற்ற முடிய உரைக்க முடியாது. அதன் பெருமையை விளக்கமாகக் கூறவேண்டும் என்பது கம்பரின் விருப்பம். தனி நூலில் அதன் பெருமையைக் கூறினால், மக்கள் யாவரும் விருப்பத்துடன் படிக்கமாட்டார்கள் என்று அவர் எண்ணியிருத்தல் வேண்டும். எனவே அவர் தக்கதொரு வாய்ப்புக்காகக் காத்திருந்தார். பிரகலாதன் தன் தந்தைக்கு நாராயண நாமத்தின் பெருமையைக் கூறும் பகுதி அவருக்கு நல்லதொரு வாய்ப்பு ஆயிற்று. அவர் அந்த வாய்ப்பினை நன்ருகப் பயன்படுத்திக்கொண்டார். தமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அவர் முற்பட்டார்; பிரகலாதனின் கூற்ருக,

"மண்ணி னின்றுமேல் மலரயன்
உலகுற வாழும்
எண்ணில் பூதங்கள் நிற்பன
திரிவன இவற்றின்
உள்நி றைந்துள கரணத்தி
னுங்குள உணர்வும்
எண்ணு கின்றது இவ் வெட்டெழுத்
தேபிறிது இல்லை."

"முக்கண் தேவனும் நான்முகத்து
ஒருவனும் முதலா
மக்கட் காறும்இம் மந்திரம்
மறந்தவர் இறந்தார்
புக்குக் காட்டுவது அரிதுஇது
பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கினர் அல்லவர்
இதன்நிலை உணரார்."

"தோற்றம் என்னும்அத் தொல்வினைத்
தொடுகடல் சூழ்நின்று
ஏற்று நன்கலன் அரும்கலன்
யாவர்க்கும் இனிய
மாற்ற மங்கல மாதவர்
வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள் தெரிந்தமற்று
இனிஇல்லை சிறந்த."

என்பன போலும் செய்யுட்களைப் பாடியமைத்தார்.

உலகில் மக்கள் சிலர் மாயையால் மூடப்பட்டுள்ளனர். கண்ணால் காண முடியாதவற்றை உண்மை எனத் துணிதற்குச் சிலர் மறுப்பர். கடவுள் ஒருவர் உண்டு என்று அறிஞர்கள் கூறும் கூற்றை ஏற்றுக் கொள்ளச் சிலர் தயங்குகின்றனர். இத்தகை யோருக்குக் கடவுட் கொள்கையை ஊட்டவிரும்பினர்

கம்பர். இரணியனுக்குப் பிரகலாதன் அறிவுரை கூறுதலாக வரும் பகுதியை அவர் பயன்படுத்தி,

"முற்படப் பயன்தரும் முன்னில் நின்றவை
பிற்படப் பயன்தரும் பின்பு போதுவ
தற்பயன் தான்இரி தருமம் இல்லையே
அற்புத மாயையால் அறிகி லார்பலர்."

"காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்
சூலையின் திருக்குஅலால் சொல்லு
வார்க்கெலாம்
வேலையும் திரையும்போல் வேறு பாடிலான்."

என்பன போலும் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். பலர் பலவிதமாக எழுப்புகின்ற மறுப்புக்களுக்கு ஏற்ற விடைகளாக இத்தகைய பாடல்கள் அமைந்துள்ள பான்மை நோக்குதற்கு உரியது.

கடவுளின் தன்மையைக் கம்பர் பல இடங்களில் தெளிவாகக் கூறியுள்ளார். கடவுள் எங்கும் நிறைந்துள்ள தன்மையைக் கம்பர் கூறியுள்ள விதம் பெரிதும் போற்றுதற்குரியது.

''மூன்றுஅவன் குணங்கள் செய்கை
மூன்றுஅவன் உருவம் மூன்று
மூன்றுகண் சுடர்கொள் சோதி
மூன்றுஅவன் உலகம் மூன்று
தோன்றலும் இடையும் ஈறும்
தொடங்கிய பொருள்கட்கு எல்லாம்
சான்றவன் இதுவே வேத
முடிவிது சாதம் என்ருன்.''

''சாணிலும் உளன்ஓர் தன்மை
அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன்மா மேருக்
குன்றினும் உளன்இந் நின்ற
தூணினும் உளன்நீ சொன்ன
சொல்லினும் உளன்இத் தன்மை
காணுதி விரைவின் என்ருன்
நன்றெனக் கனகன் நக்கான்.''

என்னும் இருபாடல்களும் கடவுளின் தன்மையையும், அவர் எங்கும் நிறைந்துள்ள செய்தியையும் நன்கு வெளிப்படுத்துகின்றன அன்ருே?

கடவுட் கொள்கையைக் குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும் என்னும் சீரிய நோக்குடனேயே கம்பர் இரணியன் வதைப் படலத்தைத் தமது நூலில் அமைத்தார் என்பது இதுகாறும் யாம் குறிப்பிட்டுள்ளவற்றிலிருந்து நன்கு விளங்கும்.

Printed at Sri Rajah Power Press, Madras.